Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மீண்டும் புதுப்பொலிவுடன்
PLANET
i-NET BROWSING
128 kbps
INTERNET BROWSING CENTRE
காலை 8.30 இருந்து இரவு 12.00 மணிவரை
our service
SCANING, PRINTING, CD WRITING, PC REPAIR
26D, பிறவுன் வீதி, கொக்குவில்.
(யாழ்.தொழில்நுட்பக்கல்லூரிக்கு முன்னால்)

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 கார்த்திகை 06 ஹிஜ்ரி 1428 ஷவ்வால் 18 (21.11.2005) திங்கட்கிழமை இதழ் 52

## சூறாவளி அபாயம்!



செய்மதிப்படம்: இலங்கைத் தீவை கருமுகில் கூட்டங்கள் மறைத்துள்ளமை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு —

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் ஏற்பட்டிருக்கும் தாழமுக்கத்தால் இலங்கையில் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடும் மழை பெய்து வருவதுடன் - கிழக்கில் சூறாவளி அபாயம் ஏற்படலாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த தாழமுக்கமானது நேற்றுக்காலை 9 மணியளவில் மட்டக்களப்பிலிருந்து 300 கிலோ மீற்றர் தொலை வில் மையம் கொண்டிருந்தது. இதிலிருந்து வடமேற்குத் திசையை நோக்கி நகர்ந்து வருகிறது. இதன் காரணமாக நாட்டின் வடக்கு- கிழக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் எழுச்சி வாரம் இன்று ஆரம்பம்!


யாழ்ப்பாணம் —

தமிழீழ விடுதலைப் போரில் வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவு கூரும் மாவீரர் நாளுக்கு முன்னோடியாக, மாவீரர் எழுச்சி வார நிகழ்வுகள் தமிழர் தாயக பிரதேச மெங்கும் இன்று உணர்வெழுச்சியுடன் ஆரம்பமாகவுள்ளது. மாவீரர் எழுச்சி வாரத்தை சிறப்பான முறையில் அனுஷ்டிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அந்தந்தப் பிரதேச பொது அமைப்புக்கள் செய்துவருகின்றன.

யாழ்.குடாநாட்டில் மாவீரர் எழுச்சி வாரத்தில் பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்தி அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றிலும், வீதிகளிலும் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டு, சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டு பொது இடங்களில் ஒலிபெருக்கி மூலம் எழுச்சிப் பாடல் இசைக்கப்படும்.

அத்துடன் மாவீரர் வாரத்தில் வீதிகள், பொது இடங்களில் சிரமதானம் செய்தல், மாவீரர்களின் பெற்றோரை கௌரவித்தல், மாணவர்களுக்கு இடையில் போட்டிகள் ஆகியன நடத்தப்படும்.

மாவீரர் தின நிகழ்வை சிறப்பாக அனுஷ்டிக்கும்வகையில் மாவீரர் துயிலும் இல்லங்கள் மெருகூட்டப்பட்டு வருகிறன.




# நோர்வேயை அகற்றுவதற்கு ஜனாதிபதி மகிந்த திட்டம்!

## கொழும்பு அரசியல் வட்டாரத்தில் பரபரப்பு


கொழும்பு —

புதிய ஜனாதிபதியாக பதவியேற்றிருக்கும் மகிந்த ராஜபக்ஷ - சமாதான முயற்சிகளில் அனுசரணையாளராகச் செயற்படும் நோர்வேயை வெளியேற்றும் சாத்தியக்கூறுகள் இருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பொறுப்பேற்றதும் தனது முதல் உரையில் - கடந்த காலங்களில் எம்முடன் இணைந்து செயற்பட்ட நட்புநாடுகளின் உதவியுடன் இனப்பிரச்சினைக்கு கௌரவமான அமைதியை ஏற்படுத்தவுள்ளதாக அறிவித்திருந்தார்.

ஆனால், ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட மகிந்தவின் ஆங்கில உரையில் இந்தியா உள்ளிட்ட ஆசிய நாடுகள், சர்வதேச நாடுகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய பிரதமராக டி.எம்.ஜெயரட்ண



கொழும்பு —

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான டி.எம்.ஜெயரட்ண இன்று பிரதமராகப் பதவியேற்கவுள்ளதாகத் தெரிய வருகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## உடன்பாட்டை திருத்த முயன்றால் நோர்வே அரசு வெளியேறும்!

### தூதரக அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு —

போர் நிறுத்த உடன்பாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திருத்தங்களை மேற்கொள்ள முயற்சிப்பாரேயானால், சமாதான ஏற்பாட்டாளர் என்ற நிலையில் இருந்து நோர்வே விலகிவிடும் என - கொழும்பில் உள்ள நோர்வே தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## புதிய அமைச்சரவையில் ஜே.வி.பி இடம்பெறுமா?

கொழும்பு —

ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவால் அறிவிக்கப்படவுள்ள புதிய அமைச்சரவையில் - ஜே.வி.பி இடம்பெறுமா என்பது குறித்து சந்தேகங்கள் நிலவுகின்றன.

ஆரம்பத்தில் ஜே.வி.பியினர் ஐந்து அமைச்சுக்களை தரவேண்டும் எனக் கோரியிருப்பதாகவும் - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதற்கு இணங்கி

## போட்டிகளில் வென்றோருக்கு தேசியத் தலைவரின் சான்றிதழ்!



கிளிநொச்சி —

புலிகளின் குரல் வானொலி பதினைந்தாவது கலை இலக்கியப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு தமிழீழத் தேசியத் தலைவரின் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

வானொலி 15 விழா நேற்று

கொழும்பு

போர் நிறுத்த உடன்பாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திருத்தங்களை மேற்கொள்ள முயற்சிப்பாரேயானால், சமாதான ஏற்பாட்டாளர் என்ற நிலையில் இருந்து நோர்வே விலகிவிடும் என - கொழும்பில் உள்ள நோர்வே தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்த அந்த அதிகாரி -

முன்னைய அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்புக்களினதும் பூரண சம்மதத்துடனேயே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. போர் நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் சரிவர கடைப்பிடிக்கப்படுமாயின் அதற்கெதிரான விமர்சனங்கள் எழுந்திருக்காது.

இந்த ஒப்பந்தத்தில் குறைபாடுகள் உள்ளதாக நோர்வே கருதவில்லை. 2002 ஆம் ஆண்டு தொடக்கம் இதற்கெதிரான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. எனினும், ஒப்பந்த மீறல் சம்பவங்களிடையே அது தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

புதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

கின்றன.

ஆரம்பத்தில் ஜே.வி.பியினர் ஐந்து அமைச்சுக்களை தரவேண்டும் எனக் கோரியிருப்பதாகவும் - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதற்கு இணங்கியிருப்ப தாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரான அனுர குமாரதிஸ நாயக்க தனது நெருங்கிய சகாக்களிடன் இதுகுறித்து மறுப்புத் தெரிவித்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல்வீரவன்ச ஊடகத்

(12 ஆம் பக்கம் பார்க்க)



யப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு தமிழீழத் தேசியத் தலைவரின் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

வானோசை 15 விழா நேற்று புலிகளின் குரல் அமலன் அரங்கில் நடைபெற்றது.

பிற்பகல் 4 மணிக்கு தொடங்கிய நிகழ்வில் பொதுச்சுடரை தமிழீழ அரசியற்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்றினார். ஈகச் சுடரை தமிழீழ அரசியற் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் ஏற்றினார். பொது மாவீரர் நினைவுக் கல்லறைக்கு சோதியா படையணியின் சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா மலர்மாலை அணி வித்தார்.

புலிகளின் குரல் பொறுப்பாளர் நா. தமிழன்பன் தலைமையில் நடைபெற்ற வானோசை - 15 விழா வில் வரவேற்புரையை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இளம் பெண்ணின் சடலம் மீட்பு!

பருத்தித்துறை

வல்லிபுரக்கோவிலுக்கு அண்மையாகவுள்ள வலிக்கண்டிப் பகுதியில் உள்ள பற்றைக்குள் இருந்து இளம் பெண் ஒருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

வலிக்கண்டிப் பகுதியிலுள்ள பற்றை ஒன்றுக்கு அண்மையாக இளம் பெண் ஒருவரின் சடலம் இருப் பதை அவதானித்த பொதுமக்கள் - பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார், மேற்படி சட லத்தை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்திய

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வெளிவிவகார அமைச்சும் அனுராவுக்குக் கிடையாது!

கொழும்பு

மகிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையில் பிரதமர் பதவி வழங்கப்படும் என வாக்குறுதியளிக்கப்பட்ட அனுராவுக்கு வெளிவிவகார அமைச்சர் பதவியும் வழங்கப்படமாட்டாது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதும் - பிரதமர் பதவி அனுராவுக்கு வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. ஆனால், மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் அனுராவை ஓரம்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அனுரா பணடாரநாயக்காவுக்கு எதிராக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே பிரசார நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறார்.

ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக அனுரா பிரசாரத்தில் ஈடுபடாதது குறித்து அவர் கேள்வி எழுப்பி வருகிறார்.

அத்துடன், மகிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையில் அனுராவுக்கு நிச்சயமாக வெளிவிவகார அமைச்சுப் பதவியும் வழங்கப்படமாட்டாது என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கமான முக்கியஸ்தர்களுடனான கூட்டத்தின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவுக்கு புதனன்று பிரியாவிடை!

கொழும்பு

இலங்கையின் ஐந்தாவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவிப் பிரமாணம் செய்து கொண்டதை அடுத்து - ஓய்வு பெறும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் 23 ஆம் திகதி ஜனாதிபதிக்கான பொறுப்புகளையும், கடமைகளையும் அவரிடம் கையளிக்கவுள்ளார்.

இதற்கான விசேட நிகழ்வும் சந்திரிகா குமாரதுங்காவுக்கான பிரியாவிடை நிகழ்வும் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது. புதிதாக பதவியேற்ற ஜனாதிபதிக்கு 21 பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு வரவேற்பு அளிக்கப்பட

(12 ஆம் பக்கம் பார்க்க)




EXPOAIR

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2[illegible]0290/1

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

Your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...



# சிறப்புற நடைபெற்ற கலை, இலக்கியப் பெருவிழா





யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் தேசிய கலை, இலக்கியப் பெருவிழா நேற்று காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மண்டபத்தில் அரச அதிபர் க.கணேஷ் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், சிறப்பு விருந்தினராக முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா திலகநாயகம் போல், வடகிழக்கு மாகாணசபை முன்னாள் பொதுச் செயலாளர் திருமதி சிவசிதம்பரம், பேராசிரியர் சண்முகதாஸ், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி க.பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் மங்கள விளக்கை அரச அதிபர் கணேஷ், துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், பேராசிரியர் சண்முகதாஸ், முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி திலகநாயகம் போல் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

இதனை தொடர்ந்து வரவேற்புரையை மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி நிகழ்த்தினார். தொடர்ந்து பிரதேச ரீதியான கலாசார பேரவையின் ஏற்பாட்டில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இதனை அடுத்து மாவட்ட ரீதியில் வெற்றி பெற்ற கலைஞர்கள், மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்திய அரச அதிபர் க.கணேஷ் தெரிவிக்கையில் - பிரதேச செயலக ரீதியாக கலை, கலாசார போட்டிகளைநடத்துவதன் மூலம் எமது கலை, காலாசாரத்தை வளர்த்து கொள்வதுடன், கலாசாரத்தை அழிய விடாமல் பேணிப்பாதுகாக்கவும் முடிகின்றது. இப்படியான கலைகளை வளம்படுத்துவதற்காகத்தான் பிரதேச செயலக ரீதியாக கலாசார உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழரின் கலாசார விழுமியங்கள் அழிவடையும் அபாய நிலையில்!

## முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்

தமிழரின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் அழிவடைந்து விடுமோ என்ற ஓர் அபாயகரமான நிலையிலேயே இளம் சமுதாயத்தினரது செயற்பாடுகள் அமைந்திருப்பதாக - யாழ்.மாவட்ட முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா திலகநாயகம் போல் தெரிவித்தார்.

யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்ற தேசிய கலை, இலக்கிய, கலாசார பெருவிழா நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

தமிழர் என்ற தேசிய இனம் தனது உரிமைக்காக போராடுகின்ற ஓர் இனமாக இருக்கிறது. இந்த இனத்துக்கென்று தனித்துவமான கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் இருக்கின்றன என்பதை எவரும் மறந்து விடமுடியாது.

இன்றைய காலகட்டத்தில் தமிழர்களுடைய பண்பாட்டு விழுமியங்களை புலப்படுத்துகின்ற கலை, கலாசார நிகழ்வுகள் நடைபெறுகின்ற போது இளம் தலைமுறையினரை நிகழ்வுகளில் காணமுடியாதிருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாக இருக்கிறது.

இத்தகைய நிகழ்வுகளை புலம்பெயர்ந்து வாழுகின்ற எமது மக்களிடையே நடத்துகின்ற போது பெரும் எண்ணிக்கையானவர்கள் கலந்து கொள்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

எமது பண்டைய கலை, கலாசாரம் தோன்றிய இடத்திலேயே பேணிக் காப்பதற்கு இருக்கின்ற கூட்டத்தை விட, புலம்பெயர்ந்த நாடுகளில் கூட்டம் அதிகமாக இருக்கின்றது என்பது கவலைக்குரிய விடயமாக இருக்கிறது.

எமது இனத்துக்குரிய தனித்துவமான கலை, கலாசார நிகழ்வுகளை வளர்த்தெடுப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் கலை, இலக்கியத்துக்கு பங்களிப்பு செய்து எமது பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களை பாதுகாக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பண்டத்தரிப்பு பகுதிகளில் அதிகரித்து வரும் திருட்டு!

பண்டத்தரிப்பு

பண்டத்தரிப்பு - சில்லாலை பகுதிகளில் அடிக்கடி திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இதனால் இந்தப் பகுதி மக்கள் அச்சமுடன் இரவு நேரத்தைக் கழிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் சில்லாலை மேற்கு பகுதியில் ஞானவைரவர் ஆலயத்தில் அமைந்துள்ள திருப்பணி உண்டியலை உடைத்து அதில் உள்ள பெருமளவான பணம் திருடப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம் மற்றும்வேறு இடங்களுக்குச் செல்பவர்கள் தமது துவிச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைக்கும் பண்டத்தரிப்பு சந்தியில் அமைந்துள்ள கடைத்தொகுதி அருகாமையில் அடிக்கடி சைக்கிள்கள் திருடப்பட்டுவருகின்றன.

இத்தகைய திருட்டுக்கள் தொடர்பாக பொலிஸாரிடம் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் அவர்கள் எடுப்பதாக இல்லை என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

# உள்ளூராட்சி உத்தியோகத்தர்களுக்கு விரைவில் பதவியுயர்வு வழங்கப்படும்!

## பிராந்திய உதவி ஆணையாளர் தெரிவிப்பு

சுதுமலை

யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சிசபைகளில் உள்ளூராட்சி உதவியாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு மிகவிரைவில் செயலாளர் தரத்துக்கு பதவி உயர்வு வழங்கப்படவுள்ளதாக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான கூட்டம் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் உதவி ஆணையாளர் தலைமையில் நடைபெற்றது.

இதில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி உதவியாளர்கள் மூலமே உள்ளூராட்சி சபையின் அனைத்து திட்டமிடல் நிர்வாக சேவைகளும் வரையறுக்கப்படவுள்ளன.

செயலாளர் இல்லாத சந்தர்ப்பங்களில் அனுமதியுடன் பதில் செயலாளராக பணிபுரிவதற்குரிய ஒழுங்கு விதிகளை மிகவிரைவில் எழுத்து மூலமாக வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறேன்.

மேலும் திட்டமிடல் பிரிவிற்கான உள்ளூராட்சி உதவியாளர்களே திட்டமிடல் மற்றும் சேவைகள் பகுதிக்கு பொறுப் பானவர்கள் ஆவர். இதனை அவர்கள் நடை முறைப்படுத்துவதற்கான அதிகாரங்கள் மிகவிரைவில் எழுத்து மூலமாக சபைகளுக்கு அனுப்பிவைக்கப்படும். எனத் தெரிவித்தார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### தென்னங்கன்று வழங்கல்

கரவெட்டி

கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு வடமராட்சி போரூட் ஒளி நிறுவனம், சொண் நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் சனசமூக நிலைய சமாசத்தினால் இன்று காலை 11 மணிக்கு கரவெட்டிப் பிரதேச சபையில் வைத்து இலவச தென்னங்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

கரவெட்டிப் பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலைய உறுப்பினர்களை இந்த நிகழ்வில் கலந்து தமக்குரிய தென்னங்கன்றுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு சனசமூக நிலைய சமாசச் செயலாளர் கு.மகாலிங்கம் தெரிவித்தார். (12)

### முத்திரையிடல்!

மானிப்பாய்

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட வியாபார நிலையங்களின் நிறுவைகள், அளவைகள் கருவிகளுக்கு அடுத்த ஆண்டு முத்திரையிடல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பகுதியிலுள்ள வியாபார நிலையங்கள் நாளை முதல் மானிப்பாய் பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தில் முத்திரையிடலை அலுவலக நேரத்தில் செய்து கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து வியாபார நிலைய உரிமையாளர்களும் கட்டாயம் தமது நிறுவைகள் அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிடல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (44)

### மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் மூவர் படுகாயம்

யாழ்ப்பாணம்

யாழ். ஐந்து சந்திப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் மூவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற கொட்டடியைச் சேர்ந்த கஜமுகன் (வயது 23), நாவாந்துறையைச் சேர்ந்த ஜெயரூபன் (வயது 26) ஆகிய இருவரும், சைக்கிளில் சென்று கொண்டிருந்த கல்வயலைச் சேர்ந்த நிக்ஷன் (வயது 15) ஆகிய மூவருமே காயடைந்தவர்களாவர்.

காயமடைந்த மூவரும் யாழ். போதனாவைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

### சண்டிலிப்பாயில் தொழிற்பயிற்சி

சண்டிலிப்பாய்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கட்டட நிர்மாணம், பனைசார் அபிவிருத்தி, தையல் போன்ற தொழில் சார் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி நெறிகளில் - கட்டடநிர்மாணப் பயிற்சி நெறியைக் கற்பவர்களுக்கு ஆறுமாத பயிற்சி வழங்கப்படவுள்ளதுடன், பயிற்சி முடிவில் தொழில் உபகரணங்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேற்கூறப்பட்ட பயிற்சி நெறியை பயில விரும்புவோர் கிராம அலுவலருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## மாவீரர் தினத்தை முன்னிட்டு

# சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை நடத்திய கவிதைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை நடத்திய கவிதைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கவிதைப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு -

முதலாம் இடம் - வ.யோகானந்தசிவம் (வட்டுக்கோட்டை), இரண்டாம் இடம் - நல்லை அமிழ்தன் (54 புதிய செம்மணி வீதி, யாழ்ப்பாணம்), மூன்றாம் இடம் - தம்பிராசா பரமலிங்கம் -மூலபாரதி (நாவலடி ஒழுங்கை, வண்ணார்பண்ணை வடக்கு)

பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர் விபரம் வருமாறு-

யோ.யூட் நிமலன் (காந்தரூபன் அறிவுச்சோலை), திருமதி. மாலாதேவி மதிவதனன் (மங்குளியன் வளவு, அளவெட்டி), இசைமதி (இல.89, உருத்திரபுரம் கிளிநொச்சி), பிரபாஜினி (மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி), செ.பரமநாதன் (மானிப்பாய் வீதி, தாவடி), வேல்மகன் (நக்கீரன் வீதி, அல்வாய் வடக்கு), வி.ஜெயபால் (வைத்தீஸ்வராக் கல்லூரி), கா.சுயந்தன் (பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி) பூ.ஜெயமலர் (விக்ரோரியாக் கல்லூரி), ப.யாழவன் (பழம் வீதி கந்தர்மடம்).

இவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைமைச் செயலகத்தில் இடம்பெறும்.

அன்றைய தினம் தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்தநாளை முன்னிட்டு உயர்கல்வி நிறுவனங்களில் கல்விகற்கின்ற மாணவர்களின் வசதிகருதி துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

சுன்னாகம் நாகம்ஸ்
இன்று முதல் :-
பார்த்தீபன், லஷ்சுமிராய், வடிவேல் மற்றும் பலர் நடித்த
குண்டக்க மண்டக்க
காட்சிகள்:-11.00,3.00,7.00, 9.30, 1.00 (ப.நே)

ராஜா யாழ்ப்பாணம்
4ஆவது வாரமாக...
விக்ரம், அசின்
மணிவண்ணன், வடிவேல் மற்றும் பலர் நடித்த
மஜா
காட்சிகள்:-10.30,2.30, 3.30, 9.30 (பு.நேரம்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
தனுஷ், பிரியாமணி
அது ஒரு கனாக்காலம்
இசை:இளையராஜா
கதைவசனம்:பாலுமகேந்திரா
காட்சிகள்;-10.30, 2.30,6.30, (புதிய நேரம்)

நிறைஞ்சனாஸ் சங்கானை
ரஜனி, சிவாஜி, அம்பிகா மற்றும் பலர் நடித்த
படிக்காதவன்
காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்
யாழ்.மாவட்டத்தில் முதன்முறையாக 4ஆவது வெற்றி வாரமாக....

DIGITAL dts SOUND
ஒலிநயத்துடன்
இளைய தளபதி
விஜய் வெடிக்கும்
சிவகாசி
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

# யாழ்.குடாநாட்டில் சிங்களப் படைகளின் வீழ்ச்சிதான் தமிழீழ விடுதலைக்கான இறுதிப் போராக அமையும்

## கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை



கிளிநொச்சி

**யாழ்.குடாநாட்டில் சிங்களப் படைகளின் வீழ்ச்சிதான் தமிழீழத்தின் இறுதிப் போராக இருக்கும் என்று கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

**நேற்றுமுன்தினம் நடைபெற்ற லெப்.கேணல் கங்கை அமரன் கடற்படை துணைப்படை பயிற்சிப் பாசறை அணி பயிற்சி நிறைவு நிகழ்வில் அவர் ஆற்றிய உரையின் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.**

இனவாதக் கட்சிகளான ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமயவின் கட்சிகளுக்கு ஆதரவாக சிங்கள தேசத்து மக்கள் இம்முறை வாக்களித்திருக்கிறார்கள்.

கடந்தகால படிப்பினைகள் எல்லாவற்றையும் மறந்துவிட்டு சிங்களம் மீண்டும் இனவாதத்துடன் இணைந்து நிற்கிறபோது அவர்களுக்குரிய வழியில்தான் பதில் கூறவேண்டிய கட்டம் இது.

1983 ஆம் ஆண்டு முதல் இதுநாள் வரை இருந்த சிங்கள அரசியல் தலைவர்கள்தான் போர் என்றால் போர் - சமாதானமென்றால் சமாதானம் என்று போர் முரசு கொட்டி, தமிழர்களுக்கான இராணுவக் கட்டமைப்பை உருவாக்கிய பெருமைக்குரியவர்கள்.

இப்பொழுது இருப்பதுபோல் 1983 ஆம் ஆண்டுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளில் படைப்பலக் கட்டமைப்பு இருக்கவில்லை. அன்றைக்கு யாழ்.குடாநாட்டில் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டபோது, அந்த இனப்படுகொலைகளைத் தடுத்து நிறுத்தக்கூடிய அளவிற்கு விடுதலைப்புலிகள் வலுப் படைத்தவர்களாக இருக்கவில்லை.

1987 ஆம் ஆண்டு இராணுவ ஆக்கிரமிப்பு நடந்தபோது அதை எதிர்கொள்ள முடியாத மிகவும் பலவீனமான நிலையிலேயே விடுதலைப் புலிகளின் கட்டமைப்பு இருந்தது. அண்டை நாடான இந்தியா எங்களுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தி நடத்திய போரை 2 ஆயிரத்துக்கும் குறைவான விடுதலைப் புலிகள் தான் எதிர்கொண்டனர்.

இந்திய இராணுவத்துக்கு எதிராக 2 ஆண்டுகளாக நடந்த சண்டையின் போதான - மிகவும் நெருக்கடியான காலகட்டத்திலும் கூட இந்திய இராணுவத்தை விடுதலைப்புலிகள் வெளியேற்றும் பலமாக்கியது மக்கள்தான். அந்த மக்களின் பலத்திலிருந்துதான் இன்றைக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் மரபுவழி தமிழர்களின் படையாக வளர்ந்து நிற்கின்றார்கள்.

2001 ஆம் ஆண்டு 4 ஆம் மாதம் வரை தமிழீழத்தில் படை நடத்திய சிங்களப் படைத் தளபதிகள் தோற்றுப் போனதாகவே வரலாறு உண்டு. யாரும் வெற்றதாக வரலாறு இல்லை.

இந்தியாவினது படைத்தளபதிகளாக இருந்தாலும் சரி, சிறிலங்காவினது படைத்தளபதிகளாக இருந்தாலும்சரி கடந்த பல ஆண்டுகாலம் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் படை நடத்தி தங்களுடைய ஆயிரக்கணக்கான படையினரை இழந்தார்களேயொழிய எங்களை வென்றதாக வரலாறு இல்லை.

இந்திய இராணுவத்தினது ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கிற அந்தக் காலம் வரைக்கும் இப்போது கொண்டிருக்கிற இராணுவ கட்டமைப்பை நாம் கொண்டிருக்கவில்லை.

தமிழர்களின் தலைவர் பிரபாகரனின் ஆட்சியில், அவரது அதிகாரத்தில் நாங்கள் ஆளப்படவேண்டுமாக இருந்தால், தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆள வேண்டுமானதாக இருந்தால், அவரது காலத்திலேயே எமது இறுதி இலக்கான தமிழீழத்தை அடைவதைத் தவிர வேறு வழியில்லை.

இனவாதத்தைக் கக்கிக்கொண்டிருக்கிற ஜே.வி.பி எங்களுக்குமுன் சிங்களத்துக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கியவர்கள். ஆனால் பிழையான வழிநடத்தலால் ஏராளமான சிங்கள இளைஞர்கள் கொன்று குவிக்கப்பட்ட போதும் இலக்கை அடைய முடியவில்லை.

ஏனென்றால் அவர்களுக்கு என்று ஒரு தளம் இல்லை. ஆனால் எங்களுடைய விடுதலைப்போராட்ட காலத்தில், போர் தொடங்கப்பட்ட மிகக்குறுகிய காலத்துக்குள்ளேயே விடுதலைப்புலிகளுக்கு என்று ஒரு தளப் பிராந்தியத்தை உருவாக்கி, அந்தத் தளத்தில் எமது படையணிகளை நிலைகொள்ள வைத்து எம்முடைய விடுதலைப் போராட்டத்தை இந்த அளவிற்கு நகர்த்தியவர் எமது தலைவர்.

1987 ஆம் ஆண்டு ஏற்பட்ட நெருக்கடியின்போது மிகக் குறைவான போராளிகளே இருந்தனர். சிங்களம் படையெடுத்துக் கொண்டிருந்தபோது கரும்புலிகள் என்ற புதிய ஆயுதத்தைப் பிரயோகித்து சிங்களத்தைத் தலைகுனிய வைத்து இந்தியாவை மண்டியிட வைத்தவர் எங்களுடைய தலைவர்.

இன்று ஆட்சிப் பெறுப்பேற்கிற சிங்களத் தலைமைகளுக்கு விடுதலைப்புலிகளின் பலம் பற்றித் தெரியாமல் இருக்காது. இதுவரை படை நடத்திய சிங்களப் படைகளுக்கு விடுதலைப்புலிகளின் பலம் என்ன என்று நன்கு தெரியும்.

நமது தலைவரின் சமாதான வழியில் சிங்களத்தின் தலைமை பேசித் தீர்வு காணப்போவது கிடையாது.

4 ஆண்டுகளாகப் போர் ஓய்ந்து நிற்கிறது. ஆனால் நடந்த திசை, பக்கங்கள், பாதைகள் எல்லாவற்றையும் மறந்து விட்டு இப்போது இனவாதத்துக்கு மட்டும் சிங்களவர்கள் வாக்களித்து இனவாதத்தை வலுவேற்றியிருக்கிறார்கள்.

இந்த வலுவை உடைத்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இறுதிக்கட்டத்துக்குத் தள்ளி, விடுதலையை வீச்சாக்கிய பொறுப்பு மக்களாகிய உங்களைத் தான் சாரும்.

இன்றைக்கு கடற்படை வலுவடைந்திருக்கிறது என்றால் அன்று கடற்புலிகளின் கரங்களை மக்கள் வலுப்படுத்தியதாலேயே அது நடந்துள்ளது.

பூநகரியில் நாம் 42 அடி நீளமுள்ள 5 நீருந்து விசைப் படகுகளைக் கைப்பற்றினோம். பூநகரிப் பகுதியில் தொடராக விமானக் குண்டுவீச்சு நடந்த நேரத்திலும் பூநகரியிலிருந்து வடமராட்சி தளத்துக்கு அவற்றை யாழ்.குடா நாட்டின் எல்லாப் பகுதி மக்களுமாக இணைந்து பத்திரமாகச் சேர்த்தபடியால்தான் இன்றைக்கு நாம் கடற்படையாக வலுவடைந்துள்ளோம்.

ஓயாத அலை - 01 இல் நாம் கைப்பற்றிய பீரங்கியை எடுத்துவர பிரதான பாதை இருக்கவில்லை. யுத்தம் நடந்த நேரத்திலும் அவற்றை நாம் கடற்கரையூடாக நடகார்த்தியெடுத்து வந்ததால் தான் ஓயாத அலைகள் - 01 நடவடிக்கையில் வென்றோம்.

அதேபோல்தான் வெற்றிலைக்கேணியிலிருந்து குடாரப்பு தரை இறங்கம். பங்குனி மாதத்தில் வழமைக்கு மாறாக கடல் இருந்தபோதும் அந்தக் கொந்தளிப்புக்கு ஈடாக கடற்புலிகளோடு சேர்ந்து மக்களின் படகுகள் படையணிகளைப் பத்திரமாகத் தரையிறங்கி பாரிய வெற்றியைப் பெறுவதற்கு உறுதுணையாக இருந்தார்கள் மக்கள்.

இன்று குடாநாட்டிலே 40 ஆயிரம் சிங்களப் படைகள் உள்ளன. இவர்கள் இங்கிருந்து தப்பிப்போக ஒரே ஒரு வழி கடல் மட்டும்தான். இந்தக் குடாநாட்டில் சிங்களப் படைகளின் வீழ்ச்சிதான் தமிழீழ விடுதலைப் போரின் இறுதிப் போராக இருக்கும். அதில் மாற்றமில்லை.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள்

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சூழல் பாதுகாக்கும் திட்டம் ஒன்றினை கரித்தாஸ் நிறுவனம் ஆரம்பித்துள்ளது. இதன் மூலம் கரையோரப் பாதுகாப்பை பேண முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. முதற் கட்டமாக சுனாமியால் பாதிக்கப்பட்ட திருச்செந்தூர், கல்லடி, கல்லடி உப்போடை, பூநொச்சிமுனை ஆகிய கிராமங்களில் பச்சை மரங்களை நாட்டுவதன் மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் சூழலைப் பாதுகாப்பதுடன், கரையோரப் பிரதேசங்களில் கடலரிப்பையும் தவிர்த்துக் கொள்ள முடியும் என அதன் திட்டப் பணிப்பாளர் மைக்கல் அருளானந்தம் தெரிவித்தார்.

இந்தச் செயற்திட்டமானது மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர் மற்றும் கிராமசேவகரின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுவதாகவும், மட்டுநகர் வனவள பகுதியின் சிபாரிசும், கொழும்பு கரையோர சுற்றாடல் பாதுகாப்பு இலாகாவின் அனுமதியும் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேற்கூறிய கிராமங்களுக்கு முதற்கட்டமாக சவுக்கு மரங்கள், தென்னை மரங்கள் நாட்டப்படுவதாகவும், இவற்றினைப் பராமரிப்பதற்காக மக்களுக்கு இலவச கருத்தரங்குகள் நடத்தப்படுவதுடன் கரையோரத்தினை பராமரிப்பதற்கு பராமரிப்பாளர்களும் நியமிக்கப்படுவர் எனவும் கூறினார்.

இவற்றின் மூலம் பல நன்மைகளைப் பெறமுடியும், அத்துடன் சுத்தமான ஒரு சூழலை உருவாக்க முடிவதுடன் இயற்கையினால் ஏற்பட்ட பல்வேறு அனர்த்தங்களையும் ஓரளவு தடுத்துக்கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# எதிர்வரும் 22 ஆம் திகதியன்று புதிய அமைச்சரவை பதவியேற்கும்

கொழும்பு

சிறிலங்காவின் புதிய அமைச்சரவை எதிர்வரும் 22 ஆம் திகதியன்று பதவியேற்க உள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் நிமால் சிறிபால டி சில்வா பேசும்போது-

புதிய அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் பதவியேற்கும் புதிய அமைச்சரவை சார்பில் மகிந்தவின் சிந்தனையை உள்ளடக்கிய வரவு - செலவுத்திட்டம் தாக்கல் செய்யப்படும்.

நிதி அமைச்சர் சரத் அமுனுகம அண்மையில் தாக்கல் செய்த நிதி நிலை அறிக்கையை இரத்துச் செய்வது தொடர்பாக ஆராய இன்று அனைத்து அரசியல் கட்சிப் பிரதிநிதிகளின் கூட் டம் சபாநாயகர் தலைமையில் நடைபெறவுள்ளது.

புதிய அரச தலைவர் தேர்வுக்குப் பின்னர் சிறிலங்கா நாடாளுமன்றம் நாளை கூடவுள்ளது என்றும் தெரிவித்தார்.

இதனிடையே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் பிரதமர் பதவிக்கான போட்டியில் சுசில் பிரமேஜயந்த போட்டியிட வாய்ப்புகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

புதிய அமைச்சரவையில் ஜே.வி.பி மற்றும் ஈ.பி.டி.பி, பேரியல் அஸ்ரப் கட்சி ஆகியவையும் இணைத்துக் கொள்ளப்படுமெனவும் தெரிகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயலாளராக லலித் வீரதுங்க நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரதமரையும் புதிய அமைச்சர்களையும் ஜனாதிபதியே முடிவு செய்யவுள்ளார்

## மங்கள சமரவீர

கொழும்பு

இலங்கையில் புதிதாக அமைக்கப்படவுள்ள அரசில் பிரதம மந்திரியையும், புதிய அமைச்சரவையையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே நியமனம் செய்வார். எனவே அது தொடர்பாக எதுவித ஆரூடமும் கூறமுடியாது என்று தெரிவித்திருக்கும் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர -ஆறுமுகம் தொண்டமானும், ரவூப் ஹக்கிமும் மகிந்தவின் சிந்தனைகளை ஏற்றால் அவர்களை எமது அரசில் இணைத்துக்கொள்ளவும் தயார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலில் வெற்றிபெற்று ஜனாதிபதிப் பதவியை மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்ட பின்னர் அவரது வெற்றிக்கு ஒத்துழைப்பை வழங்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சியினருக்கும், வாக்களித்த மற்றும் வாக்களிக்காத மக்களுக்கும், அமைப்புகளுக்கும் நன்றி தெரிவிக்கும் முகமாக கொழும்பு கலதாரி உல்லாச விடுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிடுகையிலேயே மங்கள சமரவீர இவ்வாறு தெரிவித்தார்.

# யானை - புலி கூட்டணி பிரசாரம் பொய்யானது மகிழ்ச்சி அளிக்கிறது

கொழும்பு

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமிழ்பேசும் மக்கள் வாக்களிக்காததால் யானை-புலி கூட்டணி என்ற எதிர்க்கட்சியினரது பிரசாரம் பொய்யாகி விட்டதில் மகிழ்ச்சியடைவதாக உடுவே தம்மாலோக்க தேரர் கூறியுள்ளார்.


தேர்தல் முடிவுகள் தொடர்பாக அவர் வெளியிட்ட கருத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிராமப்புற அளவில் ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டமைப்பு பலவீனமாக உள்ளது அதை வலுப்படுத்தவேண்டும். சிறிலங்காவை ரணில் பிளவுபடுத்திவிடுவார் என்று மேற்கொள்ளப்பட்ட பொய்ப் பிரசாரத்தால் தென்னிலங்கை மக்களின் வாக்கு அவருக்கு கிடைக்கவில்லை. ஜே.வி.பியினர்தான் இந்த மூளைச்சலவை செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

ரணில் விக்கிரமசிங்கவை தமிழீழ விடுதலைப்புலிகளும் ஆதரிக்காதது மகிழ்ச்சிதான். யானை-புலி கூட்டணி அமைப்பென மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்கள் பொய்யானவை என்று இந்தத் தேர்தல் முடிவுகள் நிரூபித்துள்ளது.

தென்னிலங்கையில் உள்ள தமிழர்களும்கூட ரணிலுக்கு இந்த முறை வாக்களிக்கவில்லை. அப்படியான நிலையில் யானை - புலி கூட்டணி எப்படி இருக்க முடியும்? தேர்தல் முடிவுகளையடுத்து ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையில் மாற்றங்கள் ஏற்படத் தேவையில்லை என்று தாம் கருதுவதாகவும் தம்மலோக தேரர் கூறினார்.

# வெற்றியின் விளிம்பில் அவுஸ்ரேலியா!




ஹோபாட் —

அவுஸ்ரேலிய அணிக்கு எதிராக ஹோபாட்டில் நடைபெற்றுவரும் 2ஆவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 2ஆவது இனிங்ஸில் 334 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தது. இதன் மூலம் இனிங்ஸ் தோல்வியிலிருந்து இந்த அணி தப்பித்துக் கொண்டது.

நேற்றுமுன்தினம் ஆட்டநேரமுடிவில் - 4 விக்கெட் இழப்புக்கு 82 ஓட்டங்களுடன் மேற்கிந்தியத் தீவுகள் அணி தடுமாறிக் கொண்டிருந்தது. லாறா 18 ஓட்டங்களுடனும், சாமுவேல்ஸ் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று ஆட்டம் தொடர்ந்தபோது - ஸ்கோர் 133ஐ எட்டியபோது 5ஆவது விக்கெட்டாக லாறா ஆட்டமிழந்தார். வோனின் பந்துவீச்சில் கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த இவர் 119 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 45 ஓட்டங்களைப் பெற்றார்.

இவரையடுத்து பிராவோ களமிறங்கி மேற்கியத் தீவுகள் அணியின் மானத்தைக் காத்தார். ஸ்கோர் 140ஆக இருந்தபோது 6ஆவது விக்கெட்டாக வீழ்த்தப்பட்ட சாமுவேல்ஸ் - 87 பந்துகளில் 23 ஓட்டங்களை எடுத்தார். வோனின் சுழலில் ஹொட்ஜிடம் பிடிகொடுத்து இவர் பவிலியன் திரும்ப நேரிட்டது.



தொடர்ந்து பிராவோவுடன் ரம்டீன் இணைந்தார். இவர்கள் இருவரும் மிகவும் நிதானமாக ஆட்டத்தைத் தொடர்ந்ததால், அவுஸ்ரேலிய அணியின் பந்துவீச்சாளர்களால் மேற்கிந்தியத் தீவுகள் அணியை இனிங்ஸ் தோல்விக்குள் தள்ளமுடியாமல் போனது.


ஸ்கோர் 325ஐ எட்டும்வரை தாக்குப் பிடித்தது இந்த ஜோடி. 7ஆவது விக்கெட்டாக மக்கில்லின் பந்துவீச்சில் வோனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த ரம்டீன்- 190 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 71 ஓட்டங்களை எடுத்தார்.

இதன்பின்னர் மேற்கிந்தியத் தீவுகள் அணி அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்தது. ஸ்கோர் 326ஆக இருந்தபோது ஓட்டமெதையும் பெறாமலிருந்த பவல், மக்கில்லின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து ஸ்கோர் 332ஆக இருந்தபோது பிராவோவின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. வோனின் பந்தில் போல்டான இவர் 202 பந்துகளில் 15 பவுண்டரிகளுடன் 113 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.



அடுத்து எட்வேட்ஸ் - கொலிமோர் ஜோடி இணைந்தது. ஆனால், 334 ஓட்டங்களை அணி பெற்றிருந்தபோது கடைசி விக்கெட்டும் வீழ்த்தப்பட்டது. வோனின் பந்தில் கில்கிறிஸ்டிடம் பிடி[illegible]டுத்து ஆட்டமிழந்த கொலிமோர் ஓட்டமெதையும் பெறவில்லை.



பந்துவீச்சில் வோன் 4, மக்கில், மக்ரா, லீ ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

முதல் இனிங்ஸில் 149 ஓட்டங்களையும், 2ஆவது இனிங்ஸில் 334 ஓட்டங்களையும் பெற்றுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணியை வெற்றிபெறுவதற்கு அவுஸ்ரேலிய அணி இன்னமும் 77 ஓட்டங்களைப் பெறவேண்டியுள்ளது.

நாளை 5ஆவது நாள் ஆட்டம் நடைபெறவுள்ள நிலையில் அவுஸ்ரேலிய அணி இந்த இலக்கை இலகுவாக எட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## கொல்கத்தா 4ஆவது ஒருநாள் போட்டி

# கங்கூலி சேர்க்கப்படாததால் மந்தமான ரிக்கெட் விற்பனை

கொல்கத்தா —

இந்திய - தென்னாபிரிக்க அணிகளிடையே நடைபெற்றுவரும் ஒருநாள் தொடரின் 4ஆவது போட்டி கொல்கத்தாவில் எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் கங்கூலி விளையாடாதது கொல்கத்தா ரசிகர்கள் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒருநாள் போட்டியில் அவர் சேர்க்கப்படாமல் இருந்ததால் ஏற்கனவே கொல்கத்தா ரசிகர்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தார்கள்.

இப்போது கொல்கத்தா போட்டியைப் புறக்கணித்து தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தத் திட்டமிட்டுள்ளனர். இந்தியாவிலேயே கொல்கத்தா கிரிக்கெட் மைதானம்தான் பெரியது. 90 ஆயிரம் பேர் அமர்ந்து போட்டியைப் பார்க்கலாம்.

இங்கு ரசிர்களும் மிக அதிகம். எனவே ரிக்கெட் விற்பனை தொடங்கியதுமே வழக்கமாக விற்றுத் தீர்ந்து விடும். ஆனால், கங்கூலி ரசிகர்கள் புறக்கணித்ததால், ரிக்கெட் விற்பனை மந்தமாக உள்ளது.

இது பற்றி அறிந்த கங்கூலி- ரசிகர்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது -

இந்திய அணி தனிப்பட்ட எந்த வீரருக்காகவும் இல்லை. எந்த அமைப்பை விடவும் நாடு பெரிது. எனவே, கங்கூலி இல்லை என்றால் போட்டியைப் புறக்கணிப்போம் என்பது சரியான முடிவு அல்ல. ரசிகர்களின் ஆதரவு



இருந்தால்தான் இந்திய அணி வெற்றிபெற உதவியாக இருக்கும்.

கொல்கத்தா அதிக விளையாட்டு ரசிகர்களைக் கொண்ட நகரம். இந்திய அணிக்கு ரசிகர்களின் ஆதரவில் குறை ஏற்பட்டுவிடக்கூடாது என கங்கூலி கூறினார்.

## அதிக நேரம் எடுத்ததால்

# பாகிஸ்தான் அணி வீரர்கள் அனைவருக்கும் அபராதம்!

பைசலாபாத் —

முல்டானில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் பந்துவீசுவதற்கு அதிக நேரம் எடுத்துக் கொண்டதற்காக பாகிஸ்தான் வீரர்கள் அனைவருக்கும் சர்வதேச கிரிக்கெட் சபை அபராதம் விதித்துள்ளது.


முல்டானில் புதன்கிழமை முடிவுற்ற முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்தை 22 ஓட்டங்களில் தோற்கடித்தது பாகிஸ்தான்.

அந்தப் போட்டிக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஓவர்களில் 2 ஓவர்கள் குறைவாக வீசப்பட்டதற்காக அணி வீரர்கள் அனைவரும் ஆட்டத்துக்கான சம்பளத்தில் 10 சதவீதத் தொகையை அபராதமாகச் செலுத்த வேண்டுமென ஐ.சி.சி கூறியுள்ளது.

அணியின் கப்டன் என்ற முறையில் இன்சமாம் உல்-ஹக்குக்கு 20 சதவீதம் அபராதம் விதித்துள்ளது ஐ.சி.சி.

இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஹொகாட்டுக்கும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு





# இங்கிலாந்து அணிக்கு எதிராக பாகிஸ்தான் 300 ஓட்டங்கள்!

பைசலாபாத் —

பைசலாபாத்தில் இங்கிலாந்து அணிக்கு எதிராக நேற்று ஆரம்பமான 2ஆவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி நிலைத்து நின்று நிதானமாக ஆடி 4 விக்கெட் இழப்புக்கு 300 ஓட்டங்களைக் குவித்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

சொகைப் மலிக்கும், சல்மான் பட்டும் தொடக்க வீரர்களாக இறங்கினர். ஸ்கோர் 53ஐ எட்டும்வரை இருவரும் இணைந்து ஆடிக் கொண்டிருந்தபோது - முதல் விக்கெட்டை ஹார்மிசன் வீழ்த்தினார்.

50 பந்துகளில் 4 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 24 ஓட்டங்களை எடுத்திருந்த சல்மான் பட் - ஹார்மிசனின் பந்தை அடிக்கமுற்பட்டு ஜோன்ஸிடம் பிடிகொடுத்து தனது விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

அடுத்து யுனுஸ்கான் களமிறங்கினார். ஆனால், எதிர்பார்த்ததைப் போல அவர் நின்று பிடிக்கவில்லை.

ஸ்கோர் 63ஆக இருந்த போதே பிளின்ரொப்பின் பந்தில் பீற்றர்ஸனிடம் பிடிகொடுத்து இவர் ஆட்டமிழந்து சென்றார். 24 பந்துகளில் இவர் 7 ஓட்டங்களை மட்டுமே அணிக்குப் பெற்றுக் கொடுத்தார்.

அடுத்து சொகைப் மலிக்குடன் இணைந்தார் மொகமட் யூசுப். ஆனால், ஸ்கோர் 73ஐ எட்டியபோது - தொடக்க வீரரான சொகைப் மலிக் - ஹொகாட்டின் பந்தில் பிளின்ரொப்பிடம் பிடிகொடுத்து பவிலியன் திரும்பநேரிட்டது. இவர் 87 பந்துகளில் 2 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 27 ஓட்டங்களை எடுத்தார்.

இவரையடுத்து மொகமட் யூசுப்புடன் இன்சமாம் உல்-ஹக் இணைந்து நிதானமாக ஆட்டத்தைத் தொடர்ந்தார். இதனால் அணியின் ஸ்கோர் 200ஐ கடந்தது.


இந்த நிலையில் ஸ்கோர் 201ஆக இருந்த போது மொகமட் யூசுப், பெல்லின் பந்துவீச்சில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்து சென்றார். இவர் 143 பந்துகளில் 8 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 78 ஓட்டங்களைக் குவித்தார்.

தொடர்ந்து இன்சமாம் - சயிட் அப்ரிடி ஜோடி இணைந்தது. அப்ரிடி களமிறங்கியதும் ஆட்டத்தில் அனல் பறந்தது. சிக்ஸர்கள், பவுண்டரிகளாக இங்கிலாந்து பந்து வீச்சாளர்களின் பந்துகளை இவர் விரட்டியடித்தார்.

நேற்றைய ஆட்டம் 81 ஓவர்களுடன் இடைநிறுத்தப்பட்ட போது - பாகிஸ்தான் அணி 4 விக்கெட் இழப்புக்கு 300 ஓட்டங்களைப் பெற்றநிலையில் இருந்தது.

இன்சமாம் உல்-ஹக் 159 பந்துகளில் 8 பவுண்டரிகளுடன் 80 ஓட்டங்களையும், சயிட் அப்ரிடி 62 பந்துகளில் 5 பவுண்டரிகள், 4 சிக்ஸர்களுடன் 67 ஓட்டங்களையும் பெற்ற நிலையில் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் ஹொகாட், பிளின்ரொப், ஹார்மிசன், பெல் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தனர்.





# இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்தினர் மீது அதிருப்தி!

சுதுமலை —

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறை வளாகத்தில் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் இன்மையால் மாணவர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இசைத்துறை வளாகத்தில் துவிச்சக்கரவண்டி பாதுகாப்புக்கென சிறிய தகரக் கொட்டகை அமைக்கப்பட்டுள்ளமையால் மாணவர்கள் சைக்கிள், மோட்டார் சைக்கிள்களை மரநிழல்களில் நிறுத்திவருகின்றனர். இதேவேளை, தமக்கான கற்றல் செயற்பாடுகளுக்கு போதுமான கட்டட வசதிகள் இல்லை யெனவும் மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமக்கான வசதிகளை ஏற்படுத்தி கற்றல் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மாணவர்கள் கேட்டுள்ளனர்.


நடனத்துறை வளாகத்தில் இயங்கிவரும் சித்திரமும் வடிவமைப்பும்துறை மாணவர்கள் அடிப்படை வசதிகளின்றி அவதிப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

சிற்பம் செய்வதற்கென பிரத்தியேகமான இடம் இன்மையால் மரநிழலிலும், கட்டட தாழ்வாரப் பகுதிகளிலும் சிற்பம் செய்வதாகவும், தமது கற்கைநெறி தொடங்கி ஆறு வருடங்களாகியும் இதுவரை இதற்கான இடம் ஒதுக்கப்படவில்லையெனவும் மாணவர்கள் குறிப்பிடுகின்றனர்.

மாணவர்களால் தற்காலிகமாக அமைக்கப்பட்ட கொட்டகைக்குள் வைத்தே தாம் சிற்பம் செய்து வருவதாகவும், இதனால் மழை காலங்களில் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் 280 மணவர்கள் வரை சித்திரமும் வடிவமைப்புத் துறையில் கற்றுவருவதாகவும் தமது பாடத்துக்கான விரிவுரைகளுக்கு இதுவரை நிரந்தரமாக ஒரு விரிவுரையாளரை பல்கலைக்கழக நிர்வாகம் நியமிக்கவில்லையெனவும் மாணவர்கள் விசனமடைந்துள்ளனர். (91)

# படங்களும் செய்திகளும்



வடமராட்சி கரவெட்டியைச் சேர்ந்த சங்கீத பூஷணம் கலாபூஷணம் திருமதி இராசம்மா மரியாம்பிள்ளையின் நினைவாக. அவரது குடும்பத்தினரால் வெளியிடப்பட்ட வடமராட்சியின் இசைப்பாரம்பரியம் என்ற நூல் பற்றிய கருத்தாடல் அண்மையில் கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிசன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது. அமலமரித்தியாகிகள் சபையின் வடமாகாண முதல்வர் அருட்தந்தை சா.ம.செல்வரட்ணம் அடிகளார் (கரவையூர்ச் செல்வம்) உரையாற்றுவதையும் படத்தில் காணலாம்.

## யாழ்.உள்ளூராட்சி சபைகளுக்கு இந்திய அரசினால் நிதி உதவிகள்!

மானிப்பாய்

யாழ்ப்பாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு இந்திய அரசினால் பல்வேறு கட்டுமானப் பணிகளுக்கான நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

கலாசாரம், கட்டுமானம், சுற்றுலா, கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட 20 இற்கும் மேற்பட்ட துறைகளில் சிறியளவிலான அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்த உதவிகள் அளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் க.சபாபதிப்பிள்ளை இந்த நிதியுதவிக்கான கடிதங்களையும், முன்மொழிவுத் திட்டத்துக்கான படிவங்களையும் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இந்தத் திட்டங்களுக்கான முன்மொழிவுகள் திட்டமிடற் பிரிவுப் பொறுப்பதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு அதன் இரு பிரதிகள் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் ஊடாக அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் உள்ள ஏனைய பிரதேசசபை, நகரசபை, மாநகரசபை பகுதிகளுக்கும் இந்த உதவித்திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(91)



பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய சாரணர்கள் தமது வெளிக்களச் செயற்பாடொன்றாக பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை சூழலினை சிரமதானம் மூலமாக துப்பரவு செய்தபோது. பருத்தித்துறை வைத்தியசாலை பொறுப்பதிகாரி சி.கதிரவேற்பிள்ளையுடன் சாரணர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம்।

# தொடர்ச்சியான மண்அகழ்வினால் வெள்ளத்தில் மூழ்கியுள்ள கிராமம்!

ஆனைக்கோட்டை —

அரியாலை ஜே - 96, யூதாததேயு ஆலய கிராமம் தொடர்ச்சியான மணல் அகழ்வினால் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் கிராம மக்கள் இடம்பெயரும் நிலை ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும் மழையினால் மணல் அகழ்ந்த பகுதிகளில் தேங்கிய மழைநீர், குடியிருப்புகளுக்குள் புகுந்துள்ளதுடன், குறுக்கு வீதிகளையும் மூடியுள்ளது.

கடந்தகால இராணுவ நடவடிக்கையினால் சேதமடைந்த வீடுகளில் வதியும் மக்கள் தொடர்ச்சியான மழையால் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தமது பகுதிகளில் இன்னமும் மிதிவெடி அபாயமுள்ளதாகவும், கடந்தவாரமும் பசுமாடு ஒன்று மிதிவெடியில் சிக்கி காலை இழந்ததாகவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

மணியம்தோட்டம் கடற்கரையிலும் தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம்பெறுவதால், கடல்நீர் கிராமத்துக்குள் புகும் அபாயமுள்ளதாகவும், வீட்டு உரிமையாளர்கள் அற்ற காணிகளிலும், யூதாததேயு ஆலய சூழலிலும் அதிகளவில் மணல் அகழ்வு இடம்பெறுகின்றதாகவும் தெரியவந்துள்ளது.

மணல் அகழ்வைத் தடுப்பதற்கு தாம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டும் அவை பயனளிக்கவில்லையெனவும், கிராம மக்களும் மணல் அகழ்வை மேற்கொள்வதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (91)




பருத்தித்துறை பிரதேச செயலகம் நடத்திய முதியோர் சிறுவர் தின நிகழ்வில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் உரையாற்றுவதையும். மேடையில் விருந்தினர்கள். மேலதிக அரசஅதிபர் ஆ.சிவசுவாமி, பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அதிகாரி க.மயிலேறும்பெருமாள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம். (14)

## ஊக்குவிப்பு திட்டசமூகப் பகுப்பாய்வும் வியாபார மேம்படுத்தல் மீள்பார்வையும்!

சுதுமலை —

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் ஊக்குவிப்புத் திட்ட சமூகப் பகுப்பாய்வும், எஸ்.ஐ.வை.பி.வியாபார மேம்படுத்தல் மீள்பார்வையும், 22 ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 9.30 மணிக்கு இளவாலை புனித யூதாததேயு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


சமூகப் பகுப்பாய்வுத் திட்டம் - தொடர் நிகழ்வாக இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் கழிவுப்பொருள் விற்பனர் ஆறுமுகத்தைக் கௌரவித்து 'கைவினைக் கலைஞர்' எனும் பட்டம் வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் நிறுவனத்தின் இயக்குநர், இணைப்பாளர், ஊக்குவிப்பாளர் எனப் பலரும் கலந்து கொள்வுள்ளதாக ஊக்குவிப்பாளர் எஸ்.பாஸ்கரன் தெரிவித்தார். (91)

## சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளவும்

கொக்குவில் —

2005 பெப்ரவரி 9 ஆம் திகதி தொடக்கம் இம்மாதம் 9 ஆம் திகதி வரையான மூன்று மாத கடலோட்டு இயந்திரவியல் பயிற்சி நெறிகளைப் பெற்றுக் கொண்டவர்கள்தங்களது சான்றிதழ்களை கல்லூரியின் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் அ.செபஸ்தியார் பிள்ளை கேட்டுக் கொண்டுள்ளார். (206)



கரவெட்டி சாமியன் அரசடி தச்சை ஐங்கரன் அறநெறிப்பாடசாலையில் அமரர் முருகப்பர் சின்னையா ஞாபகார்த்தமாக கட்டப்பட்ட மண்டபத்திறப்பு விழாவில். யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் மங்களவிளக்கேற்றுவதையும். விழாத்தலைவர் தச்சை ஐங்கரன் சனசமூக நிலையக்காப்பாளர் சி.பொன்னம்பலம் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# மானிப்பாய் பிரதேச சபைக்கு தலைமை அலுவலகம் அவசியம்!

சுதுமலை —

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்கான தலைமை அலுவலகம் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

நீண்ட காலமாக பிரதேசசபை தலைமை அலுவலகம் 'அலங்கரிப்பு' மண்டபத்தில் இயங்கி வருகின்றது. இதனால் சபையின் நிர்வாகக் கடமைகளை முழுமையாகச் செயற்படுத்த முடியாதுள்ளது.

இவற்றைக் குறிப்பிட்டு வடக்கு- கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.தங்கராஜனுக்கு யாழ்.மாவட்ட அரசஅதிபர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மானிப்பாய் பிரதேச சபையின் அலுவலகர்கள் கடமையாற்றுவதற்கு போதுமான இடவசதிஇன்மை நிலவுகின்றது.

மிக விரைவில் நீர்ப் திட்டத்தின் ஊடாக நிதி ஒதுக்கீடு செய்து திட்ட முன்மொழிவினை ஏற்றுச் செயற்படுத்துமாறு அரச அதிபர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (91)

## தொடர் மழை - வெள்ளத்தினால் குடியிருப்பாளர்கள் அவதி!

கொக்குவில் —

தொடர்ந்து பெய்துவரும் மழையால் யாழ்.புறநகர் பகுதிகளான பொம்மைவெளி, சூரியவெளிவயல்பகுதி குடியேற்றங்களில் வெள்ளநீர் புகுந்துள்ளதால் குடியிருப்பாளர்கள் மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

நாவாந்துறை கடற்கரை வீதியை ஊடறுத்து புதிதாக தற்காலிகப் பாலம் ஒன்றை அமைத்துள்ளபோதும், அதனூடாக கடலுக்கு மழைநீர் செலுத்தப்படும் பள்ளப்பகுதியில் வெள்ளம் தேங்கிநிற்கிறது.

இதனால் அப்பகுதியில் நுளம்புப் பெருக்கத்தால் நோய் தொற்று அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (206)

## பொன்னாடை போர்த்தி கௌரவிப்பு

கொக்குவில் —

சங்கானை இலுப்பைத்தாழ் கதிர்வேலாயுதபிள்ளை ஆலயத்தில் அண்மையில் கந்தசஷ்டி விழா நடைபெற்று, கந்தபுராணம் படிக்கப்பட்டது. இதன் பொருள் விரிவாக்கத்தை நிகழ்த்திய சித்தாந்த வாருதி கலைமாணி க.தெய்வேந்திரம் பாராட்டி கௌரவித்து. ஆலய பிரதிஸ்டாகுரு சி.நித்தியானந்தக்குருக்கள் வாழ்த்துரை வழங்கியதோடு கோவில் தர்மகர்த்தா அமிர்ததாசனும், நிர்வாகி அம்மையாரும் பொருள் விரிவாக்கத்தை நிகழ்த்தினர்.




# அகலிகை மீண்டு வந்தாள்!

சிறுகதை

**வை**ரம் பாய்ந்த உடல்வாகு, உயரத்துக்கேற்ற குறுந்தாடி, கபாலத்து வாரத்தின் மேல் அள்ளிக் கட்டிய கருகருவென்ற உச்சிக் குடுமி, திறந்த விரிந்த மார்பு, தோளில் துவராடைத்துண்டு, கைகளில் தண்டு கமண்டலம்.

ஆச்சிரம வாசலில் காவல் கிடக்கும் மித்தடியின் குமுழியை, காலின் பெருவிரலும் அதன் இணைவிரலும், தமதுாட்டில் கௌவ்விக்கொள்ள ஆற்றுக் கரையை நோக்கி, ஒற்றையடிப் பாதையில், பூதேவி நலியும் படியாக, பீடு நடையில் போகும் உருவத்தை, உன்னிப்பாகக் கவனித்த பலசூதனன், இன்றாவது 'கனிந்தி ருக்கிறதே' என உள்ளம் பூரிக்க, மடலூர்தவில் வெற்றியீட்டியவனாக, முடிந்தவரை விரைவாக, தேவதாரு மரத்திலிருந்து இறங்கி, பூமியில் கால் பதிக்கிறான்.

தன்னை அவசரம் அவசரமாகச் சரி செய்தபடி, ஆச்சிரமத்துள் கால் வைக்கவும், வாசலின் விதானத் தடி தடை செய்யவும், சரியாக இருக்கிறது. குபீரெனக் கொப்பளித்த கோபத்தை, சூழலை உன்னி கட்டில் போட்டுத் தலை குனிந்து உள் செல்கிறான் தலை குனிந்தறியாப் பலசூதனன்;

ஒரு தலைக்காதலினால், பங்கப்பட்டு துயர் மிஞ்சிய நிலையில், தனது கைதேர்ந்த கலையான சூழ்ச்சியைத் துணைகொண்டு, வந்திருப்பவனுக்கு பர்ணசாலையில், என்றோ கை நழுவி மற்றவனுக்காளாகிய இதய தேவதையைத் தேடவேண்டிய சிரமமின்றிக் கட்டாந் தரையில் தருப்பைப் பாயின்மேல், பாலில் குளித்த கோவில் விக்கிரமாகத் துகில் கலைந்த நிலையில், பார்ப்போரைக் கிறங்க வைக்கும் மென்நகை இதழ்களில் படர, அச்சமின்றி தூங்குகிறாள் என்பதை, ஒரே கதியல் ஏறி இறங்கும் மார்பகம், மூலையில் சாலம் செய்யும் நெய் விளக்கின ஒளிச் சிதறலினால் உறுதி செய்கிறது.

மின் அலைகள் அவனது நெஞ்சிலே விசிறிப் பாய்கின்றன! எதையாவது பார்க்கத் தவறிவிடுவேனோ என்ற அச்சத்தால் இமைக்காது 'நாறல மீனைப் பூனை பார்ப்பது போல் பார்க்கிறான்!

இளமை முதுமையற்ற, அகலிகையின் கவர்ச்சியைக் கண்கள் பிரதட்சணம் செய்கின்றன! நுங்கி நுரைக்கும் உணர்வலைகள், உடலில் முறுக்கேற்றுகின்றன! சித்த வண்டு தன்னை அறியாது அவளுக்கு அடிமையாகிக் கொண்டு வருகிறது! சிருஷ்டித் திறனை செவ்வென ஆராயத் துடிக்கிறது மனம்!

அதோ! அவளின் வலது தளிர் கரம் பக்கத்தில் தடவுகிறதே! தேடுகிறதே! தருணத்தைப் புரிந்து சலனம் ஏற்படாதவாறு பக்கத்தில் படுத்துக்கொள்கிறான் பலசூதனன். அவனது இடது கையைக் கதுவி, மார்புக்குக் குறுக்காக விட்டு, இடது பக்கம் சரிந்து படுக்க எத்தனிப்பதைப் பயன்படுத்தித் தானும் தூக்கமெனப் 'பம்மாத்து' செய்தபடி, இடது கையை, மனம் மறுக்க, இழுத்து, வலது கரத்தைப் படரவிட்டபடி, இடது பக்கம் சரிந்து படுக்கிறான் பலசூதனன்!

எதிர்பார்த்ததுபோல அவனின் வலது கரம் இப்போ அவளின் இடது கரத்துள் அவனைக் கட்டித் தழுவியது போலவும் தழுவாததுபோலவும் அவனது வலது கரம்! அதனால் ஏற்படும் உணர்ச்சிக்கு மேலும் உரமூட்டுவது போல, கரத்தின் மறுபகுதி மிருதுவான உரசலுக்கும், அழுத்தத்துக்கும் அவளின் மென்மையான பகுதியில், உட்படுத்தப் பட்டதினால், கட்டுமீறிய உணர்ச்சியை உணருகிறான்! இந்தத் தருணத்தில், உணர்ச்சிச் சுழிப்பினால் ஏடாகூடமாக, ஏதாவது சிக்கலுக்குள் மாட்டிக்கொள்ளக் கூடாதேயென, மனத்தின் வாகனை சுண்டியிழுத்துக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டிய தேவை, சற்றுமுன் அனுபவித்த இன்பத்துக்கு இடையூறு விளைவித்தது! இன்னும் 'மேரு' கைக்குள் அடங்கிற சமயம் பார்த்தா, அகலிகையின் வலது கரம், இடது கரத்தின் பிடிக்குளிருந்த அவனது வலது கரத்தைப் பற்றி, ஆராயவேண்டும்?

தொற்றிக் கொண்டிருக்கும் அருவருப்பும், புடையனின் சீறல் போன்ற முதுகுப் புற மூச்சிரைப்பும், மரத்துக் கிடக்கும் வலது கைப் பெருவிரலும், சோரனின் சூழ்ச்சியை உறுதிப் படுத்துகிறது. பேரழிவுக்கால உருத்திரனாக்கிறது அவளை!

ஸ்பரிசத்துக்குட்பட்ட கையை 'வெடுக்கென'த் தூக்கி வீசி, பற்கள் நற நறவென நெரும ஆழிப் பேரலையாகத் துடித்து எழுகிறாள்! உலகம் ஒருகணம் இயங்காது நின்று விட்டதோ எனும்படியாக, தீ உமிழும் கண்களால், சுட்டு எரிப்பது போல வைத்தகண் வாங்காது, தடுமாறித் திகைத்து நிற்கும் பலசூதனனைப் பார்க்கிறாள்!

"ஏ ஏய்! கிட்ட நெருங்கினீயோ நீறாகிவிடுவாய்! ஜாக்கிரதை!! தனது வலு முழுவதையும் கூட்டாமல் கூட்டி எச்சரிக்கிறாள். முன் வைத்தகாலைப் பின் இழுத்து, அச்சம் கௌவ்வ தன்னைத்தானே பின்னிக்கொண்ட வலையிலிருந்து விடுபட முடியாது, செய்வதறியாது, செயலிழந்த நிலையில் நேரே பார்க்கவும் திராணியற்று, மரமாக நிற்கிறான் பலசூதனன்! பயம் மனசைக் கவ்விக் கொண்டால் வெடவெடப்புக்கு வரம்புண்டா?

புல்லிப் புணர்வது எப்போ என்று துடித்துக் கொண்டிருந்தவனுக்கு, அகலிகையின் மறுதலிப்பு - தீ கக்கும் பார்வையும் எச்சரிக்கையும், புராணப் புத்தகத்தின் ஒற்றையிலிருந்து பெயர்ந்துவரும் மகிட வர்த்தியாகப் புலப்படவே, சுரணையற்று இதெல்லாம் இல்லாமல் இருந்திருக்கலாம் என்ற எண்ணத் துளிர்ப்பு குருசேத்திரத்தில் சிகண்டி முன் பீஷ்மராக்கி வலிகுன்றச் செய்கிறது!

பல்வேறு போர் முனைகளில் களமாடி, எதிரிகளைப் புறமுதுகு காட்ட அடித்துவிரட்டிக் களித்தவன், போர் ஏறாய் பீடு நடையில் உலா வந்தவன். இன்று மானத்துக்குப் போராடும் உள்ளஉறுதிக்கு முன் ஈடுகொடுக்க மாட்டாதவனாய் - அவதந்திரம் தனக்கந்தரமாகி - கட்டாண்மை குன்றிப் பலிபீடத்தில் தலையைக் கவிழ்த்தபடி 'ஆகட்டும்' என நிற்கும், ஆட்டுக் கடாவாகச் சாம்பிப் பொலிவிழந்து நிற்கிறான் தருமத்தின் துணையிலாப் பலசூதனன்!

சிந்து நதி தீரம் சென்ற கௌதமர், 'கனவில் நடந்து வந்துவிட்டேனோ' என எண்ணியவராய், அண்ணாந்து வடதிசையைப் பார்க்கிறார். மேவிநின்ற மேகக் கூட்டங்கள், சப்தரிஷி நட்சத்திரங்களை, இல்லையென்று ஆக்கியிருந்தன. அப்படியே கிழக்கே விடிவெள்ளியைத் தேடினார், கண்ணில் சந்திரன் உதிப்பதே தென்பட்டது. 'ஓ' இன்று அபரபக்கத்து நவமி! கோழிகளுக்கு கிழக்கில் வெளுப்புத் தென்பட்டால் போதும் கூவ வேண்டியதுதான்! விழிப்பில்லாமையினால் ஐந்தாறு நாழிகைத் தூக்கம் நழுவிவிட்டதே' எனக் கழிவிரக்கப்பட்டவராய் ஆச்சிரமத்துக் குத் திரும்புகிறார்.

நிகழ்வு சத்தியம் அல்லது சரித்திரம். பின்வருபவை எல்லாம் கதை. அந்த வரிசையில் வரும் இக்கதை இன்றைய சூழலில் கால் பதித்து உருவானதினால் முன்னைய தளத்திலிருந்து விடுபட்டு விலகிநிற்பது காலத்தின் தேவையாகிறது! உண்மைகளைப் பதிவு செய்வதை விடுத்து உண்மைகளை உருவாக்க முயல்வது அபத்தமானதாகும்.

பேச்சரவம் அல்ல கூப்பாடு ஆச்சிரமத்தினுள்! கௌதமர் நிதானித்து நின்று தன்னை நுள்ளிப்பார்க்கிறார். உறுதி செய்ததின்மேல் எ.:குச் செவியைத் தீட்டிக் கொள்கிறார்.

'உருத்திராக்கப் பூனையாகப் பக்கத்தல் படுத்த காமுகனே! நீ படைத தலைவனா??

- பிராந்தியம் எதிரொலிக்கிறது எறிகணையென.

அதிர்ந்தது பலசூதனனா! கௌதமரா! அல்லது இருவருமா?

"யார் இந்தப் பிரகிரிதி?

-கௌதமர் உள்ளத்தில் தொங்கும் வினா.

அரசன்!

-சொற்கள் நலிவடைந்து சோர்கின்றன. பலசூதனனுக்கு

'தளுதளுத்த குரலுக்குரியவன் எந்த அரசனாக இருப்பான்!

-அலைபாயும் கௌதமர் உள்ளத்தைத் தடுத்து நிறுத்துவது போல் எங்கும் எதிரொலிக்கும் அகலிகையின் ஏளனச் சிரிப்பு!!

அரச நெறி பிழைத்த நீ கயவன்! தூ...!

- சினம் பீறி, தூக்கி எறிந்து பேதைப்படுத்தும் வார்த்தைப் பிரயோகம்.

கௌதமரின் கடைவாய் இதழ்களில் மென்நகை பரவி மறைகிறது.

"அதோ! அதோ! அரவம்!! முனியின் முனிவுக்...!

- சொற்கள் ஒலி குன்றத் தடுமாறிச் சரிந்து கொண்டிருந்த அகலிகை, கைச் சைகை மூலமாக பலசூதனனை விரைவாக வெளியேறும்படி பணிக்கிறாள். தாயன்பு சுரக்கும் தவக்கொழுந்து! பிறர் தீமை சொல்லா நலத்த சால்போ?

'தற்காத்துக் கொள்ளத் தெரிந்தவள்' என எண்ணிக் கொள்கிறார் கௌதமர்.

நெஞ்சைக் குதறிய கோபத் தீ முற்றாக அவிய. மறுபார்வைக்குள்ளாக்கிப் பரிவு கசிய தேவைப்பட்ட மணித்துளியில் நேரமிருந்தது!

ஆச்சிரமப் புறவேலிப் பெருவாயிலில், நிலவொளிக் கீற்றில், கௌதமரை எதிர்கொண்ட பலசூதனன், திகைப்பூண்டில் மிதித்தவனாக, சங்கடப்படுகிறான். கௌதமரின் விழிகள் 'ஓ' நீயா! என இனம் கண்டு கொள்ளுகின்றன. சொற்களின் இயக்கம் காலத்தினுள் மட்டும் என்பதினால்.

'தங்களின் வருகையின்போது, 'வெளி' செல்ல நேர்ந்துவிட்டதால், குடும்பியின் 'பாதபூஜை'க் கடமையை, இயற்ற முடியாதவாறு ஆகிவிட்டது! எவ்வாறானாலும், விருந்தினரின் மனம் கோணாதவாறு, தன்னால் முடிந்தவரை அகலிகை உபசரித்திருப்பாள! 'ம்' 'போக'த் தடையா? என்றிருப்பாரோ? அல்லது

பொங்குகின்றது ஆசை 'புக' இடம் தருக! - அன்று கேட்டிருந்தால், நீரிலிருந்து முன் வெளியேறி, அகலிகையைக் கைப்பிடிக்கச் செய்திருப்பேன்! நேரம் கெட்டநேரத்தில், கோலம் மாறி, இன்று வரவும் நேர்ந்திருக்காது!

போக உணர்வு வாழ்வின் அர்த்தத்தை இல்லையென்றாக்கிவிடும் என்பதை நிரூபித்து நிற்கிறாயே! - எனக் கூறாமல் 'ம் நீ போகலாம்' என்றிருப்பாரோ? அல்லது பேச்சின் முடிவில் மௌனத்தைச் சேரும் சொற்களை, எழுந்த மானமாகக் கொட்டாமல் - 'ம் ஏன் நிற்கிறாய் காலம் கரைகிறது' என்றிருப்பாரோ! - பிரம்ம ஞானம் அடைந்தும் உலக உபகாரமாகத் தனக்கு விதிக்கப் பட்ட விதிகளின்படி ஒழுகும் கர்ம சந்நியாசியாகிய கௌதமர், இன்னா செய்தார்க்கும் இனிய செய்யாக்கால் என்ன பயத்தோ சால்பு. என எண்ணியவராய் -

"ம் பழியும் பாவமும் ஏழு ஜென்மங்களுக்கு! - முணு முணுத்தபடி ஆச்சிரமத்துக்கு திரும்புகிறதற்கு, நிலைத்த கண்களை எடுத்து, தலையைத் திருப்புகிறார் முனிவற்ற கௌதமர்.

கௌதமரை எதிர்கொண்டபோது, ஏற்பட்ட திகைப்பும் அச்சமும், அவர் ஆச்சிரமத்தை நோக்கித் திரும்பப், பலமடங்காகிப் பலசூதனனை வேக வைத்தது. கால்கள் நிலத்தில் ஊன்றியேவிட்டன! எதுவுமே நடவாதது போல, பந்தப்படாதவராக, நடந்து கொண்டது, வாள்கொண்டு அறுப்பது போலப் பலசூதனனை துடிக்கவைத்தது! உள்ளம் மாத்திரமல்ல உடம்பு முழுவதும் வேதனையால் துவண்டது!

''ஜென்மங்கள் தோறும், ஆண்மை குன்றி, அபத்த நாயகனாக! என்றிருந்தாரானால் கூடியதான 'வலு' இருந்திருக்கும்! ஆனால்-

இப்பொழுதே ஏழேழு ஜென்மத் தண்டனை, ஒன்று கூடி ஒரு முகமாய், நெரித்து வதைப்பது போன்று துடித்தான். இடியேறு கேட்ட சர்ப்பமாய் துவண்டான்!

தலை நிமிர்த்தமுடியாதவனாய், தள்ளாடியபடி, ஆச்சிரமத்தில் நின்றும், அகலுகிறான், குற்றம் புரிந்து நிம்மதிதேடும் பலசூதனன்!

அரை நாழிகைக்கு முன்வரை, தனது தர்மவிசாரணைகளுக்கு, உடல் உபாதைகளுக்கு, உறுதுணையாக, ஊன்றுகோலாக, விளங்கிய சகதர்மிணிக்கு, நேர்ந்த விபத்தைக் காதாரக் கேட்டும், அதற்குக் காரணமானவனைக் கையும் மெய்யுமாகக் கண்டும், பொருள் செய்யாது கசிந்து 'காரியம்' கூறி, வெளியேற அனுமதிக்கத்தான் கௌதமரால் முடிந்தது!

அத்துவிதக - இரண்டல்லா ஒன்றின் - கலப்பு விசேடத்தை உணர்ந்த வழி "நான் செய்பவனல்லன் பார்வையாளன் மட்டுமே எனும் கசிவு பிறந்த, வெய்ய கர்மப்பயன்களில் நொந்து தான் மெய் அறிந்திடலாம், தொடர்புபட்டாலும் பந்தப்படாத நிலைத்த புத்தியுடைய - இக்கன்ம சந்நியாசியிடம், வேறு எதனைதான் எதிர்பார்க்க முடியும்!

'கோதாட்டு' பவனிடமிருந்து விடுபட்டு விலகி, குவிந்த உள்ளத்தின் பயனாக மூர்ச்சையாகி, படுக்கைக்கு வெளியே, நீட்டி நிமிர்ந்து, சிலையாகக் கிடக்கிறாள் அகலிகை!

வழமைக்கு மாறாக, அகலிகையிடமிருந்து விடைபெறாது, ஆச்சிரமத்திலிருந்து நீங்கியதினால், முகங்கொள்ள நேர்ந்த, விளைவுகள் மனக்கண்ணில் நிழலாட, உள்ளே வந்த கௌதமர், இடம்பெயர்ந்து, துகில்கலையா நிலையில், உலகின் உணர்வு உலர்ந்து, உலகமல்லாத, உலகுக்குள் இருக்கும் அகலிகை, படுத்திருப்பதை மம்மல் ஒளியில் பார்க்கிறார்! 'தூக்கம் வரும் தருணமா இது'? ஐயம் மீதூர நெய் விளக்கைத் தூண்டியபடி, அகலிகைக் கருகில் கொண்டுவருகிறார், கண் கொட்டாமல் அவளைப் பார்க்கிறார்! மூக்கு முனையைத் தறிவைக்கும் அவளின் இமையாப் பாதி விழிகள், அவைகளிலிருந்து வெளியேறும் கதிர்வீச்சு, இளஞாயிறோ எனும்படியான தேசு படரும் மதிமுகம், - நினையாது முன்வந்து நிற்கும் இந்தநிலை. கௌதமரைப் புல்லரிக்க வைக்கிறது! தான் வேறு உலகம் வேறாக நிர்விகல்ப சமாதியோ?

முன் அறிவு, சூழ்நிலையைத் தெரிந்திருந்ததினால், தனது கருத்தைக் குவிய வைப்பதில், விளக்கபேதம் ஏற்படாதென்பதை நிட்சயப்படுத்தியபடி, வானம், நட்சத்திரப் பூக்களைச் சொரிய, நிலா ஒளி நில பாவாடை விரிக்க, எனது காரியமும் நிறைவை நெருங்குகிறது, என எண்ணியவராய், வினை கெடாமல், தண்டு கமண்டலக் கையராய், நதிதீரத்தை நோக்கி, விரைகிறார் கௌதமர்!

விடிவாமளவும் விளக்கனைய மாயை, காரியத்தைக் கச்சிதமாய் நிறைவேற்றி, வெளியேற நிற்கிறான்!

பிரம்ம முகூர்த்தத்துக்கு முன், நதிதீரத்துக்கு அருகில் தனக்கு சாகையமைத்து, நீராடியதின் மேல், அங்கு சகச நிட்டையில் அமர்ந்து விடுகிறார் கௌதம மகரிஷி!!

மேலும் என்ன!

பார்ப்பாராகிவிட்ட கௌதமரின் பால் பசு ஐந்தும், அகலிகையின் பசுக்கள் போன்று பாலாய் சொரியத் தொடங்கும்!!



-முத்து-

# நூல் அகம்




நூலின் தலைப்பு - விழுதொன்றின் குரல் அல்லது மனிதம் புரிதல்
நூல் ஆசிரியர் - நீதிவளவன்
வெளியீடு - நீதிவளவன் வெளியீட்டாளர், வளவை வளவன்.

தேடலும், தேடலைத் தேடலிற்கேற்ப இரசனைபட வழங்கலும் அனைவரிடத்திலும் உண்டாவது இயற்கை. ஆனால் நீதிவளவனின் வரிகள் அவன் வயதில் நம்பகத்தன்மையை உண்டு பண்ணு மளவுக்கு உரை நடைப்போக்கில் ஒரு தனி நடைப்பாணியில் இரசனைச் செறிவுடன் நகர்கிறது இவனது சிந்தனைச் சிதறல்கள். இது எப்படி 17 வயது கொண்ட நீதிவளவனிடம் புகுந்து கொண்டது என்பதே இந்த நம்பகத் தன்மைக்குக் காரணமாகும். இவனது வரிகளைப் பாருங்கள் எத்தகைய ஆழம்.ஆழத்தின் அமுக் கத்தில் அவனது சிந்தனை எங்கே போகின்றதென்று.

'சுயமுடைய சுயத்துக்கு மேலாக நினைப்பது இன்னொரு சுயத்தினை இழிவாக்கிக்கொள்ளும். சுயம் சுயமாக இருப்பதும் கூட ஒரு ஒளிதான். சுயம் சுதந்திரமானதும் கூட. இயல்பினை அவாவுதல் என்பதற்கு தேவையான ஒளி'

ஏதோ வாழ்வியல் போராட்டங்களில் மோதியபின் ஆன்மீக விளிம்பில் இருந்து பேசப்படும் ஆப்த வாக்கியங்கள் போலல்லவா இருக்கின்றது. உண்மையிலே இவனது வயதுக்குஅப்பாற்பட்ட சக்தி கொண்ட வரிவடிவ தொகுப்பாகவே இந்த நூல் அமைந்துள்ளது. உதயம் சஞ்சிகைக்கான இவனின் முன்னுரை. இதயத்தை மாற்றியதால் இதயமற்றுப் போன 20ஆம் நூற்றாண்டு. தர்மத்தின் வெற்றி. வனவாசம். ஒரு சில கவிதைகள் கொண்ட உள்ளடக்கங்களால் உருப்பெற்ற இந்த நூலானது இரசனைத் தேடலுக்கு மாத்திரமல்ல உருக்குலைந்த தமிழர் உரிமைகளை வென்றெடுக்கும் உணர்வுகளோடு கூடிய தியாகப் போராட்ட வேதனைகளை அனுபவித்த உணர்வின் ஆதங்கத்தில் எடுத்தியம்புகின்றான் இவ்வாறு -

'சிதறும் உடல் எனத் தெரிந்து கொண்டும் - சிரித்துக் கொண்டே
சிதைந்தவர்கள் இவர்கள்.
மலரும் போதே உதிர்ந்து போனவர்கள் இவர்கள்
உருவம் இருந்தும் 'நிழல் மனிதர்கள் இவர்கள்'

இவற்றுக்கெல்லாம் அப்பால் தனித்துவமான எழுத்தாற்றலை 'வனவாசம்' எனும் பகுதியினூடாக வெளிக்கொணர்கின்றான். உரை நடையில் ஒரு தனித்துவம், உள்ளடக்கம், ஒரு தனிப்பாணி என நகரும் வனவாசம். எழுத்தாளர் வரை முறைக்கு அப்பாற்பட்டது என்றே என்னால் கூறமுடிகிறது.

இவனின் பிஞ்சு மனதினைப் பிளந்த சில நெருப்புகள் பிரிய மனமின்றி இவன் இதயத்தில் தங்கியமையால் தான் பீறிட்ட உணர்வுடன் இந்த நூல் பிரசுரமாக்கப்பட்டுள்ளது. உலகப்புகளுக்கென்று உருப்பெறும் தற்கால சில நூல்கள் வரிசையில் உணர்வுகளின் மத்தியில் உருப்பெற்ற இன்னூலை ஒரு கணம் நீங்களும் புரட்டிப் பாருங்கள் முடங்கி இருக்கும் உங்கள் உணர்வுகளும் இவனது வரிகளில் மடக்கி இருக்கும்.

- ஆர்.கே.லேனன்.




சஞ்சிகை -'புலரி' (கலை,இலக்கிய , சமூக ஏடு)
ஆசிரியர் - குகபரன்
இதழ் - 04 (ஆடி - புரட்டாதி-2005)
விலை - 25/-

இலக்கியங்கள் பேசப்படும் நூல்களின் வரிசையில் தனக்கென ஒரு இடம் பிடித்திருக்கும் புலரி காலாண்டிதழ் நான்காவது வெளிவந்திருக்கிறது. கலாநிதி ம.இரகுநாதனின் நேர்காணலுடன் ஆரம்பித்து, சோ.பத்மநாதன், ஜெ.கி.ஜெயசீலன், கவிநேசன், தீபச் செல்வன், ஜெசீதன், மீரா.சாதனா ஆகியோரின் கவிதைகள் எனப் படர்ந்து தொல்புரம் சி.கதிர்காமநாதனின் சிறுகதையுடன், பேராயர் கலாநிதி சு.ஜெபநேசன், கலாநிதி இரகுநாதன், ஈ.குமரன், சத்திவேல், கணேசராசா, கேசவன், நிலவன் ஆகியோரின் கட்டுரைகள் உள்ளடக்கமாக உள்ளடக்கி அளவாக கனதியாக வெளிவந்திருக்கிறது.

## மனிதம் தலைநிமிர

நேற்று
நாங்கள் கந்தகக் காற்றை நுகர்ந்தபடி
இழந்த சுவர்களையும்
மர நிழல்களையும்
இருப்பிடங்களாக்கி
இதயம் படபடப்பில்
இருந்த போதெல்லாம்
பலிபீடத்தவர்கள்
எங்களுக்காக இரங்கவில்லை

பாதங்கள் நோக
நாங்கள் செய்த யாத்திரைகள்
மரண ஓலங்கள்
எங்கள் பள்ளிகள்
கோவில்களின் மீது தூவிய
குண்டு மழைகள்
இவர்களுக்குத் தெரியவில்லை


புதை குழிகளில்
பேச்சடங்கிப் போனவர்கள்
எலும்புக் கூடுகளான
சங்கதிகள்
இவர்களின் கண்களுக்குப் புலப்படவில்லை.

போர் ஓய்வுகளிலும்
உயிர்கள் பறிக்கப்பட்டதை
வன் செயல்கள் தூண்டப்படுவதை
இவர்கள் கண்டு கொள்ளவில்லை
ஏனெனில்
உரிமைக்குரல்கள் நசிக்கப்படுவதும்
மனிதம் புதைக்கப்படுவதும்
இவர்களுக்கு இச்சையாகும்.

எங்கள் பக்க நியாயங்கள்
இவர்களுக்குப் பயங்கரவாதம்.
சப்பாத்துக் கால்களால்
நசிப்பது தான் ஜனநாயகம்
என்கிறது ஐரோப்பிய யூனியன்

சமாதானத்தைவிரும்பும்
புறாக்களின் கழுத்தில்
கத்தி வைக்கும் செயலுக்குப் பெயர்
ஜனநாயகம்
நாங்கள் மறுக்கப்பட்டாலும்
மறைக்கப்பட மாட்டோம்

எங்கள் உரிமைக்காக
குரல் கொடுப்போம்
மனிதம் தலை நிமிர
போராடுவோம்...



முருகு பாரிமகன்

# சிறீசுவின் சில கவிதைகள்

- பாலா

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அளவெட்டி என்ற கிராமமானது ஈழத்து இலக்கிய உலகிற்குக் காத்திரமான சில இலக்கியவாதிகளைத் தந்துள்ளது. அந்தச் சிலருள் மஹாகவி என்ற து.ருத்திரமூர்த்தி, அவரது மகன் கவிஞன் சேரன் நாடறிந்த படைப்பாளி. அ.செ.முருகானந்தம் என்போர் நிரந்தரப் பதிவுகள். இந்தச் சங்கிலிக் கோர்வையில் தற்போதைய கடைக் குட்டியாக இணைந்துள்ளவர் அளவெட்டி சிறிசுக்கந்தராசா. இவரே மேற்படி நூலின் ஆசிரியர். 136 பக்கங்களை உடைய இந்தக் கவிதைத் திரட்டில் 54 கவிதைகள் பதிவாகியிருக்கின்றன. முன்னெதிலும் இவை அச்சாகவில்லையென ஆசிரியர் வாக்கு மூலம் தந்துள்ளார். இந்தத் திரட்டில் அடக்கப்பட்ட கவிதைகளுக்கு பிரபல தமிழ் இலக்கியவாதி எஸ்.பொ., தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களான பேராசிரியர் த.சுமதி (கவிதை தமிழிச்சி) ஆகியோர் வழங்கியிருக்கும் முன்னீடுகள் கவிதைகளுக்கான பொழிப்புரைகளாக அமைந்து வாசகருக்கு இலகுக் கிரகிப்பை உபரிக்கின்றன.

சிறீசுவின் கவிதைகளைக் கொழித்துப் பார்த்த பொழுது சிந்தனையில் தெறித்த உணர்வுகள்.

கவிஞர் சுய அங்கீகாரத்தில் திருப்தி காண்கிறார். அவர் தமிழ் வாழ்வுள் தேடல்களையும், பரிசோதனைகளையும் நிகழ்த்தி சுதந்திரமான மானுட நேயங் கொண்ட புதியதோர் பரம்பரையைத் தோற்று விக்க எத்தனிக்கிறார். மறுதலிப்போரை அவர் வெற்றிலை வைத்து அழைப்பவரல்லப் போலும்!

திரௌபதை! உன் சகோதரர் நால்வரிடமும் அவள் கொண்ட உறவு பற்றி உனக்கென்ன தெரியும்? கொன்று விடு காலாதிகாலமாக மனதில் கனக்காமல் செறிந்த செய்தி! வழிபாட்டுத் தெய்வமாக திரௌபதை! கருணை சுரக்காமல் அந்தப் பாஞ்சாலியின் "உயிரை உரி" என கண்ணபரமாத்மாமூலமாகச்சொல்ல வைக்கிறார். இந்தப் புதுமெய்க் கவிஞர் இதைத் தமிழ்ப் பண்பாட்டின் கட்டளையாகவும் பிரகடனப்படுத்துகிறார். கற்பனை மனதில் குரங்கு பாய்கிறது.

ஒரு கணம் எவரெஸ்ற் உச்சியில் நிற்கிறது. மறு கணம் மரீனா அகழியின் அடி பார்க்க விழைகிறது. தும்பிகளை இடை மறித்து அவற்றின் கழுத்திடையில் காவடிகள் ஏற்றி வைத்து ஆட வைக்க அழைக்கிறது. நிலையற்ற மனதை கலா பூர்வமாகக் காட்டுகிறார்.

எமது கலைஞர்களது ஏழ்மையான வாழ்க்கை கவிஞரின் நெஞ்சைப் பிளக்க வைக்கிறது. கலைஞனைக் கபால ஓட்டுடன் உலா வரச் செய்கிறார். தனது வயிறெரிந்த நிலையில், சொர்க்கம் பயந்து பயந்து இறங்கிவந்து அவன் காலடியில் வீழ்ந்தது... நாள் முடியும் தறுவாயில் இப்போது ஏவலுக்கு வயிற்றைத் திறக்கிறது கபால ஓட்டுடன். பிச்சைப் பாத்திரத்துடன் கிளம்புகிறான் அவன் கலைஞன்.

உவமைகள் ஓரம்போக வார்த்தைகள் எடுகோளைக் கடத்துகின்றன. அங்கே ஒரு கவிஞனின் ஜெனனம் கொண்டாடப்படுகிறது. சிறீசு பெரிதுதான்!

இது மானத்தின் கொந்தளிப்பல்ல; இது நிஜத்தின் உயிர்ப்பு! வெறும் வாய்ச் சவாடலில் காலத்தைப் போக்கும் இவ்வுலகோர் விழிப்பார்களா?

இருளூடு பார்த்தல்... கவிதா வரிகளில் - சொந்த மண்ணின் இரவும் புகலிடத்து இரவும் எத்தகைய உணர்வுகளைப் பாய்ச்சும் என்பதை உணர்வுபூர்வமாக உணர்த்துகிறார்.

மழை வரல் கூடுமென ஒற்றைப் புள்ளொன்று நேர் கோட்டில் ஒப்பரித்துச் சென்றது. பூமிப்பந்தை மூடிச் சிக்காராயக் கறுப்புச் சேலை இது சொந்த மண்ணில்.

ஆகக் குறைந்தது எண்பது பேராவது வதிவிடம் என்று சொல்லி கொள்கின்ற குடியிருப்புக் கட்டத்தில் மருந்துக்கும் அரவம் கிடையாது. இது புகழிட மண்ணில்.

ஊரிலென்றால் பசியால் வயிறெரிய ஒரு செத்தல் நாயாவது ஊளையிட்டிருக்கும்.

அந்நிய மண்ணின் உத்தரிப்புகளை மண் வாசனை கமகமக்க எடுத்துச் சொல்லும் உத்தி எவ்வளவு அபாரமாக இருக்கிறது. இத்தகைய எண்ணங்கள் தூக்கத்தைக் கொடுக்குமா? இரவாகத்தான் இருந்தாலும்...!

பெண்ணியத்தை வீறு கொள்ளவைக்கிறது. ஆண் கற்பு. ஆனால் உயிரை உரி படல்... முரண்காட்டுகிறதே!

ஒரே (பூமிப்) பந்தின் இரு வேறு கிழவிகள்... கவிஞரின் மண்டையை உடைக்கின்றன.

நிலம் பட்ட பாதம் மழைச் சேற்றால் நுதம்ப... வயிறு எரிந்தது. இரண்டு நாள் உணவில்லை...

சொற்பமாகக் கிடந்த அரிசியும் கிடையாது... ஈழத்துக் கிழவி மழை நாளில் இப்படிச் சிந்திக்க லண்டன் கிழவியோ?

வரவேண்டிய இந்தச் சனியன் பணியாட்கள் 157 பேரில் ஒருவன் மட்டும் 212 நிமிடங்களாக இன்னும் வரவில்லை. மூதேவி... ஒருவன் வராததையிட்டு சீறுகிறாள். இந்தக் கிழவியை இராணிக் கிழிவி என கவிஞர் அத்தாட்சிப் படுத்துகிறார்.

ஆண்டவன் சிருஷ்டியில் எத்தனை விநோதங்களென வியக்கச் செய்கிறது. கணவன் இழந்தனர் - பிள்ளை இழந்தனர்- பேச்சும் இழந்தனர்- தாயக அக்கறை நேர்த்தி காத தூரத்தைத் தாண்டிய பின்னரும் மழுங்கவில்லையென்பதை பாசாங்கிடாமல் இயற்கையிடம் (மட்டும்) இறைஞ்சுதல் செய்யும் கவி உள்ளம் வாசகனை உருக்கும் தொடர்ந்தும். தூர இருந்து கொண்டு வேறெதை நான் கேட்க? நீயே சொல்... புகலிடத் தேசங்களில் இப்படி எத்தனை அகதிகள் மறைவாகக் கண்ணீர் வடிக்கின்றனரோ. அவர்கள் அனுப்பும் உண்டியல்களும், டொலர்களும் இந்தக் கண்ணீர் கதைகளைக் கூறுமா? கவிஞர் உணர்வுகளைக் கசக்கிப் பிழிய வைக்கிறார்!



சண்டை பிடியென்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன் இன்னும் புறா வளப்பில் ஈடுபட்டிருக்கிறாயே... கழுகே...!

தலைப்பாகவும், உடலாகவும் இந்த வரிகளில் அமெரிக்காவை குத்தல் செய்கிறாரா? அந்தச் சர்வதேசப் பொலிசுக்காரனுக்கே சமர்ப்பணமும் செய்திருக்கிறார். புறா வளர்ப்பில் சொந்த மண்ணும் சேர்ந்து விட்டதல்லவா? எனவே கவிஞர் யாரை ஏவுகிறார்.

இப்படியாக மனிதம் சார்ந்த முரண்பாடுகளைப் புடமிடும் நோக்கோடு அளவெட்டி சிறீசுக்கந்தராசா புதுக் கவிதைகளாகவும், வசன கவிதைகளாகவும் இத்திரட்டில் தமிழ்ச் சமூகத்திற்கு தந்துள்ளார்.

ஆழமும் கனதியும் கொண்ட கவிதைகள் முதல் படையலாக இருந்தாலும், தமிழகத்தின் கவனத்தைச் சுண்டியிழுக்கக் கூடியவை.


தலைப்புக்கள் சில உட்பட, கவிதைகளின் உள்உடலழகிலும் வேற்று மொழிச் சொற்கள் பாவனையாகி இருக்கின்றன. இவைகள் அனைத்துத் தமிழரையும் திருப்திப்படுத்தாதென்பதை தட்டித்த உணர்வோடு கவிதைகளையாத்திருக்கும் கவிஞர் உணர்ந்திருக்க வேண்டும்!

சென்னை மித்ர ஆட்ஸ் கிரியேசன்ஸ் நிறுவனத்தினர் புத்தக வெளியீட்டில் "எமக்கும் ஏலும்" எனச் சாதனை நிலை நாட்டிக் கொண்டிருப்பவர்கள் அதை இத்திரட்டிலும் பேணியிருக்கின்றனர்.

காற்றுப் புகாத இடத்திலும் கவிதை புகுமென்பர். அதற்கமைவாக சிறீசுவின் சில கவிதைகள் சகல மட்டங்களிலும் புகுந்து தமிழ் வாழ்வைச் செழுமைப்படுத்தக் கூடிய தென்பதில் யதார்த்தமுண்டு.

- நன்றி மல்லிகை

# கிராமிய அபிவிருத்தி வங்கியின் சேவைகளை மக்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்



## அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன்

கிளிநொச்சி—

போராட்ட மற்றும் இடப்பெயர்வு காலங்களில் பல இன்னல்களைச் சந்தித்த கிராமிய அபிவிருத்தி வங்கி, இன்று பல கிளைகளை நிறுவி வளர்ச்சி பெற்றுள்ளது. இந்தக் கிளைகள் வழங்கும் சேவைகளை மக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி பண்பாட்டு அலுவலகத்தில் இடம்பெற்ற கிராமிய அபிவிருத்தி வங்கியின் வழமைதாரார்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிராமிய அபிவிருத்தி வங்கியால் சென்ற மாதம் நடத்தப்பட்ட சேமிப்பு வாரத்தில் முதலீட்டு சேமிப்புக் கணக்கில் இணைந்து குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும் -

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வங்கியின் வழமைதாரர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

சுமார் 50 இற்கும் மேற்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு சிறார்களுக்கு இந்த நிகழ்வில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

கிராமிய அபிவிருத்தி வங்கியின் பொது முகாமையாளர் தவக்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் -

தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா, தமிழீழ வைப்பக மே... ர் பாலகிருஷ்ணன் உட்பட வங்கியின் பொது முகாமையாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

# முன்பள்ளிப் பாதுகாப்பு; விசேட செயற்திட்டங்கள்

கிளிநொச்சி—

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் 'முன்பள்ளி பாதுகாப்பு ஆண்டு - 2006' காலப்பகுதிக்கான விசேட செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த விசேட செயற்திட்டத்தில் இடம்பெறும் விடயங்கள் வருமாறு -

தமிழர் தாயக பிரதேசங்களில் சமூக அபிவிருத்தி மற்றும் சிறுவர் நலனைக் கருத்திற்கொண்டு 3000 முன்பள்ளிகளை மையமாகக்கொணடு 1000 இடங்களில் விசேட விழிப்புணர்வுக் கருத்தூட்டல்களை மேற்கொள்ளல் -

82,362 மாணவர்களில் 45,000 மாணவர்களுக்கு பெற்றோரை இணைத்து வைப்பகத்தில் சிறார் சேமிப்பை மேற்கொள்ளல் -

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சேமிப்பை ஏற்படுத்தும் வகையில் 5157 முன்பள்ளி ஆசிரியர்களில் 3500 பேருக்கு சேமிப்பை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்தல் -

முன்பள்ளி ஆசிரியர்களின் திறனை வலுப்படுத்தும் வகையில் அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகியனவாகும்.

## சென்னன்குளம் - தேவன்பிட்டி கிராமங்களின்

# வீதிகள் புனரமைப்புப் பணியை உடனடியாக மேற்கொள்ளவும்!

## செல்வம் அடைக்கலநாதன் பா.உ.



மன்னார்—

மன்னார் மாவட்டத்திலுள்ள சென்னன்குளம், தேவன்பிட்டி கிராமங்களின் வீதிகளைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மிகவிரைவாக மேற்கொள்ளுமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கேட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளதுடன் - மிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாக வுள்ள இந்தக் கிராமங்களின் வீதிகளில் மழைநீர் தேங்கியுள்ளது எனவும், மக்களின் சுமுகமான போக்குவரத்துக்கு ஆவன செய்யும்வகையில் வீதிகளைப் புனரமைக்குமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

இதேவேளை - 2004 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியில் குறிப்பிட்ட தொகை வீதி புனரமைப்புக்கென ஒதுக்கப்பட்ட போதும், அதற்கான வேலைகள் இடம்பெறாமையால் அந்த நிதி திரும்பியுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு தமிழீழ சுகாதார சேவையின் அறிவிப்பு

கிளிநொச்சி—

அரிசி, நெல்குற்றும் ஆலை உரிமையாளர்கள் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு தமிழீழ சுகாதார சேவையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவையினரால் அறிவிக்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகள் வருமாறு -

நெல் ஊறவைக்கப் பயன்படுத்தப்படும் தொட்டி மூன்று நாட்களுக்குமேல் நீர் தேங்காதவாறு பேணப்படல் வேண்டும்.

நெல் ஊறவைக்க பயன்படுத்தப்படும் நீர் திறந்த குழியில் விடப்படாது நீர் உறிஞ்சக்கூடிய மூடிய குழிகளுக்குள் விடப்படவேண்டும். அத்துடன் இதனுள் இலையான், நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவது குறித்து அவதானம் செலுத்தவேண்டும்.

ஆலையைச் சூழவுள்ள பகுதிகளில் நீர் தேங்கி, நுளம்பு பெருகக்கூடியனவாய் அமைந்துள்ள டயர்கள், கோப்பைகள், டின்கள், பிளாஸ்ரிக் பொருட்கள் அகற்றப்படவேண்டும்.

உமிக்கழிவுகள் காற்றுடன் கலக்காத வகையில் அகற்றப்படல் வேண்டும். ஆலைச் சூழலில் வைத்து உமி எரித்தல் தவிர்க்கப்படல் வேண்டும் - என அறிவிக்கப்பட்டுள்ளது.

## போட்டிப் பரீட்சை பிற்போடப்பட்டது

கிளிநொச்சி—

தரம் 6, 7, 8 ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இன்று நடத்தப்படவிருந்த தமிழீழ வரலாறும், சமூகக் கல்வியும் போட்டிப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தால் அடுத்த மாதம் 5ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளதாக தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்த அனைத்து பாடசாலைகளிலும் இந்தப் பரீட்சை அடுத்த மாதம் 5ஆம் திகதி காலை 9 மணிக்கு இடம்பெறுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பயனாளிகள் சந்திப்பும் கலந்துரையாடலும்

கிளிநொச்சி—

துணுக்காய் பிரதேசத்தில் சிறந்த பயனாளிகள் சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யோகபுரம் மத்தி மூவேந்தர் முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெற்றது.

யோகபுரம் மத்திய கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் த.சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில்- இந்தப் பிரதேசத்தில் உலக உணவுத் திட்டத்தின்கீழ் வீதிகள் புனரமைத்தல், நிகொட்டின் உதவியுடன் பொது மண்டபங்கள் அமைத்தல், முன்பள்ளிக் கட்டடங்கள் திருத்தம் போன்ற விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டன.

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### நவம்பர் 21

1761: சல்பூரிக்கமிலத்தை குறைந்த விலையில் உற்பத்தி செய்யக் கூடிய வழிமுறைகளைக் கண்டுபிடித்த இரசாயனவியலாளரும், மருத்துவருமான, பிரித்தானியாவைச் சேர்ந்த ஜோஷிவா வார்ட் மரணமடைந்தார்.

1783: முதன் முதலாக பாரிஸைச் சேர்ந்த பிராங்காயிஸ் டிரோஸியர் என்பவரும், மார்க்யூஸ் டி அர்லாண்டெஸ் என்பவரும் வெப்பக்காற்று நிரப்பப்பட்ட பலூனில் பறந்து காட்டினர்.

1789: வட கரோலினா பன்னிரண்டாவது மாநிலமாக ஐக்கிய அமெரிக்காவில் இணைந்தது.

1843: கந்தகம் கலந்து வலுவூட்டப்பட்ட இறப்பர் தயாரிப்பதற்கான காப்புரிமத்தை பிரிட்டனைச் சேர்ந்த தோமஸ் ஹான்ஹக் என்பவர் பெற்றார்.

1915: ஆங்கிலக் கால்வாயில் செல்லும் அனைத்துக் கப்பல்களும் இராணுவ வீரர்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களாகக் கருதப்பட்டு மூழ்கடிக்க வேண்டும் என்று தனது நீர்மூழ்கிக் கப்பல் தளபதிகளுக்கு ஜேர்மனி அரசு இரகசிய உத்தரவு பிறப்பித்தது.

1918: அமெரிக்காவில் ஜனாதிபதி உட்ரோ வில்சன் போர்க்கால மதுவிலக்குச் சட்டத்தில் கையெழுத்திட்டார்.

1921: இந்தியாவின் தென்பகுதியில் கலவரத்தில் ஈடுபட்டார்கள் எனக் கூறி நூறு பேரைக் கைது செய்து, மூடிய வாகனம் ஒன்றில் திரூர் என்ற இடத்திலிருந்து ஏற்றி பெல்லாரி சிறைக்கு அனுப்பியது பிரிட்டிஷ் அரச நிர்வாகம். ஏதோ ஒரு காரணத்துக்காக இடைவழியில் அந்த வாகனத்தைத் திறந்து பார்த்தபோது மூச்சுத் திணறி அனைவரும் மயங்கி வீழ்ந்து கிடந்தனர். அவ்விடத்திலேயே அவர்கள் அனைவரையும் இறக்கி விட்டபோது, 56 பேர் இறந்திருந்தமை கண்டறியப்பட்டது. மிகுதி 44 பேரையும் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் வழியில் 10 பேர் இறந்தனர். இந்திய வரலாற்றில் மரண வண்டி நிகழ்வு என இது குறிப்பிடப்படுகிறது.

1930: கண்டங்கள், கடல்கள் என்பவற்றின் தோற்றம் பற்றியும், கண்டங்களின் நகர்வு பற்றியும் கொள்கைகள் வகுத்துத் தந்த புகழ் பெற்ற ஜேர்மனியரான ஆல்ப் ரெட்லோந்தர் வெக்னர் காலமானார்.

1955: பிரிட்டன், துருக்கி, ஈரான், ஈராக், பாகிஸ்தான்ஆகிய ஐந்து நாடுகளின் பாதுகாப்புக் கூட்டணியின் முதலாவது கூட்டம் நடந்தது. இஸ்ரேலினால் தாக்கப்படும் எந்தவொரு அரபு நாட்டுக்கும் முழு உதவியளிப்பதாக ஈராக் உறுதியளித்தது. இந்தக் கூட்டமைப்பு பிரிட்டன் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளுக்கூடாக வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளுடனும்(NATO), பாகிஸ்தான் மற்றும் பிரிட்டன் மூலமாக தென்கிழக்காசிய ஒப்பந்த நாடுகளுடனும் (SEATO) பிணைப்பு கொண்டுள்ளது. இந்தப் பாதுகாப்புக் கூட்டணியே பிற்காலத்தில் மத்திய கிழக்கு ஒப்பந்த நாடுகள் அமைப்பாக (METO) மாறியது.

1956: சுயஸ் பகுதிக்கு ஐ.நா. சபையின் அமைதி காக்கும் படையணியின் முதலாவது பிரிவு சென்றடைந்தது.

1962: இந்திய - சீனப் போரில், சீனா போர் நிறுத்தம் செய்தது.

1970: சூரிய ஒளியானது நீரை ஊடறுத்துச் செல்லும்போது எத்தகைய விளைவை ஏற்படுத்துகின்றது என்பது பற்றி ஆய்வுகளுக்கூடாக இராமன் விதிகளைத் தந்தவரும், இவ்விதிகளுக்காக நோபல் பரிசைப் பெற்றவருமான இந்திய தமிழ்நாட்டு (திருச்சிராப்பள்ளி) விஞ்ஞானி சி.வி.இராமன் காலமானார்.

1971: பாகிஸ்தானியப் படையினரது கொடுமைகளைத் தாங்க முடியாது ஆயிரக்கணக்கானவர்கள் கிழக்கு வங்கத்திலிருந்து அகதிகளாக இந்திய எல்லைக்குள் நுழையத் தொடங்கினர்.

1972: இரண்டாவது அணு ஆயுதக் குறைப்பு உடன்படிக்கை பற்றி ஜெனீவாவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்தன.

1979: ஆயிரக்கணக்கான பாகிஸ்தானியர்கள், இஸ்லாமாபாத்திலிருந்த அமெரிக்கத் தூதரகத்தைத் தாக்கியழித்தனர். இதில் இரு அமெரிக்கர்கள் உயிரிழந்தனர். ஏனைய அமெரிக்கர்களை பாகிஸ்தான் அரசு தூதரக மாடியிலிருந்து ஹெலிப்கொப்டர்கள் மூலம் காப்பாற்றியது.

1981: அணு ஆயுதங்களைத் தடை செய்யுமாறு கோரி நான்கு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் ஆம்ஸ்டாமில் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினர்.

தொகுப்பு : – சந்துரு

நமது ஈழநாடு

வைர வரிகள்

அதிகாரத்தைப் பிடித்திருப்பவர்கள் அதை நீட்டித்துக்கொள்ளவே விரும்புகிறார்கள்.

- யாரோ -

## நமது நோக்கு

# ஜனாதிபதியின் உரையும் சமாதானத்தின் நிலையும்

புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் நேற்று முன்தினம் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் ஆற்றிய உரையில்-தனது மகிந்தவின் சிந்தனை என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருந்த வாசகங்களை மீண்டுமொரு தடவை ஒப்புவித்ததன்மூலம் தனது நிலைப்பாட்டை பல்வேறு வகையிலும் உறுதிசெய்துள்ளார்.

மகிந்தவின் சிந்தனைகளுக்கு அமைய சமாதான முயற்சிகளைத் தான் மேற்கொள்ளப்போவதாக அறிவித்த அவர், ஒற்றையாட்சியின் கீழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படும் என்ற தனது முந்தைய கோஷத்தை மிக நாகரீகமாக அழகுபடுத்தி, நாடு துண்டாடப்படுவதைத் தவிர்க்கும் வகையில் தனது சமாதான முயற்சிகள் அமையும் என்றுள்ளார்.

அது மட்டுமல்லாது - தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக சகல தரப்பினருடனும் புதிதாகப் பேச்சுக்களை ஆரம்பிக்கப்போவதாகவும், இதுவரை மேற்கொள்ளப்பட்ட இரு தரப்புப் பேச்சுவார்த்தை என்ற முறையை மாற்றி, பல தரப்பினர் பங்கேற்கும் புதியதொரு பேச்சுவார்த்தை நடைமுறை ஏற்படுத்தப்படுமென்றும், ஏற்கனவே நடைமுறையிலுள்ள புரிந்துணர்வு மற்றும் போர்நிறுத்த நடைமுறைகள் மீளாய்வுக்குட்படுத்தப்படும் எனவும் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இனிமேல் புதிதாக வேறுவகையில் பேச்சுக்களை ஆரம்பிக்கும் தன் எண்ணக்கருவையும் வெளியிட்டுள்ளார்.

இன்றுவரை பேச்சுவார்த்தைகளின் பிரதான அனுசரணைப் பணியை ஏற்றிருந்த நோர்வேயின் பங்களிப்பை நிராகரிப்பது போன்ற தொனியிலமைந்த அவரது பேச்சில், இந்தப் பொறுப்புமிக்க அனுசரணைப் பணிக்கு ஏற்கனவே சமாதானத் தீர்வை ஏற்படுத்துகிறேன் என 1987 இல் முன்வந்து, பிரச்சினையை இடியப்பச் சிக்கலாக்கி: தமிழ் மக்களுக்கு மேலும் அதிகமான அழிவை ஏற்படுத்தி அவமானப்பட்டு - வெளியேறிய இந்தியா உட்பட வேறு சில நாடுகளை உள்ளடக்கும் தனது உள்ளக்கிடக்கையையும் வெளியிட்டுள்ளார்.

இது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை எட்டுவதற்கான முயற்சிகள் என்ற பெயரில் புதியதொரு பேச்சுவார்த்தை என்ற பெயரிலான - காலம் கடத்தி ஏமாற்றும் நகர்வை 'அ'விலிருந்து ஆரம்பிக்கும் உத்தியென்பது விளக்காமலே விளங்கும்.

இந்த உத்தி - காலம்காலமாக பேரினவாத ஆட்சியாளர்களும், அவர்களின் 'பிற்பாட்டு' சக்திகளும் தமிழ் மக்களை ஏமாளிகளாக்கக் கையாண்டுவருகின்ற ஒருவகை ராஜதந்திர சதியேயாகும்.

புதிய ஜனாதிபதியின் இந்த முடிவானது இதுவரைகாலமும் எவ்வளவோ நெருக்கடிகள் - அவமதிப்புக்கள் - கண்டனங்கள் மற்றும் விமர்சனங்களுக்கு மத்தியில் சமாதான நகர்வுகளை முன்னெடுக்க மேற்கொண்ட அனைத்து முயற்சிகளையும் அதற்கான சர்வதேச ஆதரவாளர்களையும் சந்தேகித்து - நிராகரித்து - ஒதுக்கும் நோக்கம் கொண்டதேயாகும்.

புதிய ஜனாதிபதியின் இந்த அறிவிப்பின் உள்நோக்கம்- ஏற்கனவே சமாதான நகர்வுகளை அர்ப்பணிப்பு உணர்வுடன் மேற்கொண்ட நோர்வே அரசுக்கும் அதன் அனுசரணைப் பணியாளர்களுக்கும் புரியாத ஒன்றேயல்ல.

இந்தப் புதிய ஜனாதிபதியை பின்னால் நின்று இயங்கவைக்கும் ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமய போன்ற பேரினவாத சக்திகள், அவர்களின் சமாதானப் பணிகளை ஆரம்பம் முதலே எதிர்த்து - குழப்ப முயன்று செயற்பட்டவர்கள் என்பதை நோர்வேயும் ஏனைய சர்வதேச சமாதான வலியுறுத்தல்களை மேற்கொள்ளும் நாடுகளும் அறியும்.

நோர்வேயின் தேசியக்கொடியை கொழும்பில் அந்த நாட்டின் தூதரகம் முன் வைத்து எரித்தும் - எரிக் சொல்ஹெய்ம் அவர்களின் கொடும்பாவியைத் தீ மூட்டியும் கூத்தடித்து தமது அரசியல் அநாகரீகத்தை வெளிப்படுத்தியவர்களும் இதே பேரினவாதக் கும்பல்கள்தான்.

இப்போது அவர்கள் கையில்தான் இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கிடைத்துள்ளது.

எனவே, இப்போதுள்ள சமாதான சூழலுக்கும், புரிந்துணர்வு மற்றும் போர்நிறுத்த உடன்பாட்டுக்கும் இந்தத் தேர்தல் முடிவின் மூலம் முழுமையான அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றே கூறவேண்டும்.

புதிய ஜனாதிபதி பதவியேற்றுள்ள நிலையில் புதிய அமைச்சரவை அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிகிறது.

இந்த மாற்றங்கள் ஏற்பட்டபின்னர், ஆட்சிப் பொறுப்பை ஏற்கப்போகும் புதிய அரசு எத்தகைய சவாலை தமிழ் மக்களை நோக்கி விடுக்கப்போகிறது என்ற கேள்விக்கான விடை, அடுத்துவரும் சிலவாரங்களில் அல்லது ஓரிரு மாதத்தில் தெரிந்துவிடும்.

இந்தச் சூழலில் - தமிழர்கள் மீண்டும் ஒரு தடவை - இந்தத் தேர்தல் பகிஷ்கரிப்பின் மூலமும் தமது அரசியல் இலட்சிய ஒருமைப்பாட்டுணர்வைத் தீர்க்கமாக தெரியப்படுத்திவிட்ட நிறைவில், அரசின் அடுத்தகட்ட அறிவிப்புக்காகவும், நோர்வே உட்பட - சர்வதேச சமாதான சமூகத்தின் நகர்வுக்காகவும் காத்திருக்கும் அதேவேளை, எதிர்வரும் மாவீரர் நாளில் தேசியத் தலைவர் நிகழ்த்தப்போகும் உரையில்- தமது எதிர்காலம் குறித்து எத்தகைய நகர்வை மேற்கொள்ள உத்தரவிடப்போகிறார் என்ற அறிவிப்புக்காகவும் நம்பிக்கையுடனும், இலட்சிய உறுதியுடனும் காத்திருக்கிறார்கள் என்பதே இன்றைய யதார்த்தமாகும்.


267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## மாவீரர் நாள் நவம்பர் - 27.2005

"மாவீரர்களின் சாவுகள், எமது சரித்திரத்தையே இயக்கும் உந்துசக்தியாக, எமது போராட்டத்தின் உயிர்மூச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்குசக்தியாக அமைந்துவிட்டது"

- தமிழீழத் தேசியத் தலைவர் -

## நாடும் நடப்பும்




### 'ஊர்சுற்றி' யார் பார்வையில்...

# "மண் குதிரைகளை" நம்பி மஹிந்த ஆற்றில் இறங்கமாட்டாரென நம்பலாம்

இலங்கையின் இனப் பிரச்சினைக்குக் கால்கோளிட்டவர் சந்திரிகாவின் அப்பா எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க. தமது அதிகார ஆசையால் உருவாக்கிய இனவாதம் என்ற பூதம் வளர்ந்து வருவதைப் பார்த்து அதைக் கூஜாவில் அடைப்பதற்கு தமிழர் தலைவர் தந்தை செல்வாவுடன் ஒப்பந்தம் செய்தார் பண்டா? இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் நடந்த பேச்சுவார்த்தைகளின்போது நாங்கள் இப்போதே இந்த இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாவிட்டால் எங்களுக்குப் பின்பு வரும் சந்ததி, இந்த அதிகாரப் பரவலோடு திருப்தியடையாது தனி நாடு கேட்டுப் போராடினாலும் போராடும் என்று தந்தை செல்வா அடிக்கடி பண்டாரநாயக்கவுக்கு நினைவூட்டி வந்தாராம். இதை ஏற்றுத்தான் பண்டாரநாயக்க, பேச்சுவார்த்தையில் பிரதேச சபைகளுக்கு முக்கிய அதிகாரங்கள் வழங்க சம்மதித்து ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டார். இந்த ஒப்பந்தத்தை ஜே.ஆர். தலைமையிலான பேரினவாதிகள் குழப்பி, அதைக் கிழித்தெறியச் செய்தனர். பண்டாவின் பின் ஆட்சிக்கு வந்த அவரது மனைவி சிறிமா பண்டாரநாயக்க தந்தை செல்வாவின் தலைமையிலான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியையும் அவர்களின் சாத்வீகப் போராட்டங்களையும் தூசாக மதித்து நடந்ததுடன் அகிம்சைப் போராட்டங்களை ஆயுத பலம் கொண்டு அடக்கி ஒடுக்கினார். தமிழரசுக் கட்சித் தலைவர்களைவிட தான் அமைச்சராக்கிய செல்லையா குமாரசூரியரைக் கொண்டு தமிழ் மக்களைத் தமது வசப்படுத்தித் தாம் சொல்வதற்குத் தாளம் போடவைக்கலாமென்று சிறிமா நம்பினார்.

சிறிமாவின் பின், நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியை உருவாக்கி அப்பதவியை ஏற்ற ஜே.ஆர். இனப்பிரச்சினையை வைத்து தமிழ் இனத்தையே அழித்துவிடலாமென நினைத்தார். இது முடியாமற் போகவே பயங்கரவாதிகளுடன் வாழப் பழகவேண்டும் என்று சொல்லி பதவியை பிரேமதாஸாவிடம் கொடுத்து ஓய்வு பெற்றார். பிரேமதாஸா தர்மம் பேசியே தமிழினத்தை அழிக்கத் திட்டம் போட்டார். இதன் பின் ஆட்சி அதிகாரத்துக்கு அதிஷ்டவசமாக வந்த டி.பி.விஜயதுங்க, இலங்கையில் இனப்பிரச்சினையில்லை, பயங்கரவாதப் பிரச்சினைதான் இருக்கிறது என்று சொல்லிப் பயங்கரவாதப் பிரச்சினையைத் தொடக்கி வைத்தார். இனப்பிரச்சினைக்குத் தீர்வு தம்மிடம் இருக்கிறதென்று பின் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த சந்திரிகா அம்மையார் சமாதானத்துக்காக போர் தொடங்கி நடத்தினார். வெற்றிபெறமுடியாமல் பதினொரு வருடங்கள் ஆட்சியதிகாரத்தை அனுபவித்து - வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடு இலங்கை புக்கான் என்று போய்விட்டார். இப்பொழுது ஆயிரமாயிரம் வாக்குறுதிகள் கொடுத்து மஹிந்த ராஜபக்ஷ ஐந்தாவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாகப் பதவியேற்றிருக்கிறார். இவருக்கு உதவிக்கும் பக்கத்துணைக்கும் செல்லையா குமாரசூரியர் போல ஒருவர் வருவார் வருவாரென்று இவரது வெற்றிக்கு உழைத்தவர் என்ற பெயருடன் வந்தேவிட்டார் என்று என் முன் அமர்ந்திருந்த நண்பர் பரமசிவம் மூச்சுவிடாமல் சொல்லிமுடித்தார்.

யார் பக்கத்துணையாக இருந்து என்ன பயன்? தமிழ் மக்கள் யார் சொல்லை யாரும் சொல்லாமலே தலைமையின் விருப்பத்தையறிந்து நடந்துகொள்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டால்சரி. இல்லையென்றால் சிங்கள செய்தி ஆய்வாளர் நளின் சேனநாயக்கா சொல்லியிருப்பதையாவது படித்துத் தெரிந்துகொள்ளவேண்டும் என்று நான் சொன்னேன்.

இதுவரை கொழும்பிலிருந்து வெளிவரும் அரச ஊடகங்களைவிட சில தனியார் ஊடகங்கள் விடுதலைப்புலிகள் ஏதோ விளையாட்டுப் பெடியள்போலவும், அவர்களுடைய நிர்வாகத்தின் கீழுள்ள பகுதிகள் ஏதோ விளையாட்டு மைதானம் போலவும் அங்குள்ள காவல்துறை நீதிமன்றமெல்லாம் நகைப்புக்குரியனவாகவும் செய்திகளும், கட்டுரைகளும், தலையங்கங்களும் வெளியிட்டுச் சிங்களப் பொதுமக்களை அறியாமையில் வைத்திருந்தன. பேச்சுவார்த்தைக்கு வரச் சொன்னால் கூப்பிட்ட இடத்துக்கு புலிகள் வரவேண்டுமே தவிர, அவர்கள் சொல்வதுபோல் அவர்கள் சொல்லும் வெளிநாடுகளுக்கோ, அவர்கள் இருக்கும் இடத்துக்கோ போகமுடியாது என்று அரசு உறைக்கச் சொல்லிவிடவேண்டும் என்று ஒரு ஆங்கிலத் தினசரி தலையங்கம் எழுதியது. தமிழீழ விடுதலைப்புலிகளையும், தேசியத் தலைவரையும் கிண்டல் செய்வதுபோலவே இந்த ஊடகங்கள் செய்திகள், கட்டுரைகள் வெளியிடுவதும் தலையங்கம் எழுதுவதாகவுமிருந்தது. வெளி உதவிகளைக் கொண்டுவந்து புலிகளை அடக்கி ஒடுக்கவேண்டுமென்றும் இவை எழுதிவந்தன. இந்தியாவை அல்லது அமெரிக்காவை இழுத்து அந்த நாட்டுப் படைகளைக் கொண்டுவர வேண்டுமென்று இவைகள் எழுதின. இலங்கைக்குள் தமிழர்களுக்குத் தாயகமாவது, சொந்த மண்ணாவது அப்படி எதுவும் இங்கே கிடையாது என்று இவைகள் எழுதின. சிங்கள புத்திஜீவிகள் என்று கருதப்படும் சிலர் வரலாற்று ஆதாரங்கள் என்று சொல்லி, தமிழருக்கு இலங்கையில் எந்த உரிமையும் கிடையாது என்று கட்டுரைகள் எழுதிவந்தனர். இப்பொழுது இந்த ஜனாதிபதித் தேர்தல் தமிழர்கள் யார், தமிழர்களின் பலம் என்ன? அவர்களின் தலைவன் யார், அவர் எப்படிப்பட்டவர் என்பதை இலங்கையிலுள்ளவர்களுக்கு மட்டுமல்ல, உலக நாடுகளுக்கும் பிரகடனப்படுத்தியிருக்கிறது என்று பரமசிவம் சொன்னார்.

யாழ்ப்பாணத்தில் ஐம்பதினாயிரம் அரச படைகள் இருந்து அரச கட்டுப்பாட்டில் குடாநாட்டை வைத்திருப்பதாக ஒரு தோற்றத்தை அரசாங்கமும், அரசியல் வாதிகளும், ஊடகங்களும் ஏற்படுத்தியிருந்தன. இவையெல்லாம் பொய்யென்பதும் இப்போது நிரூபணமாகியிருக்கிறது என்று நான் சொன்னேன்.

சிங்கள செய்தி ஆய்வாளர் நளின் சேனநாயக்க, ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பை யாழ்.மாவட்டம் ஒட்டுமொத்மாகத் தவிர்த்து அபாயகரமான ஒரு செய்தியை கொழும்புக்குச் சொல்லியுள்ளது என்று தெரிவித்திருக்கிறார். விடுதலைப் புலிகளின் விருப்புக்கு அமைய இந்த மாவட்டம் முற்றாக வாக்களிப்பைத் தவிர்த்தமையானது, அங்கு அரசாங்கமோ அரச படைகளோ முற்றாகச் செயலிழந்து போயுள்ளதையே காட்டுகிறது. யாழ்.குடாநாடு கூட புலிகளின் பூரண கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது என்ற உண்மையை இந்தத் தேர்தல் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது என்று கூறும் நளின் - சில வாக்குகளைக்கூட யாழ்.மாவட்டத்தில் ஒட்டுமொத்தமாகப் பெறமுடியாத ஒரு ஆயுதக்குழுவையே எமது அரசியல் தலைவர் நம்பியிருக்கிறார். இப்படியான தமிழ் ஆயுதக்குழுவின் தலைவரை அமைச்சராக வைத்துக்கொண்டு வடபகுதியைத் தம்மால் ஆளமுடியும் எனக்காட்டும் அரசியல்வாதிகள் இந்தத் தேர்தல் முடிவுகள் குறித்து கற்றுக்கொள்ளவேண்டிய மிகவும் அபாயகரமான செய்தி யொன்று உள்ளது. அந்தச் செய்தி - எமது படைகளின் கட்டுப்பாட்டில் யாழ்.குடாநாடு இருப்பதாக நாம் எண்ணிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் - அது விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது என்ற உண்மையாகும். இந்த நிலையில் அங்குள்ள எமது படைகளை முற்றுகையிட்டு விடுதலைப் புலிகள் தாக்குவார்களாயின் நிலைமை என்னவாகும் என்பதே அந்த அபாயமாகும் என்று நளின் சேனநாயக்க கூறுகிறார் என்று கூறிய பரமசிவம், ஜனாதிபதி மஹிந்த வெளிநாடுகளை நம்பியிராமல் நளின் சேனநாயக்க போன்ற செய்தி ஆய்வாளர்களின் கருத்தையறிந்து விடுதலைப் புலிகளுடன் எதைப் பற்றிப் பேசுவதென்பதைத் தீர்மானித்துக்கொண்டு பேச்சுக்கு ஆயத்தமாக வேண்டும் என்று சொல்லி நடந்தார் பரமசிவம். பின் மண் குதிரைகளை நம்பி மஹிந்த ஆற்றிலிறங்கமாட்டாரென்றே நம்புவோம் என்று நின்று சொல்லிவிட்டுப் போனார்.

## நேர்காணல்...

**சின்ன நிகழ்வுகளிற்கும் ஆடம்பரமாகத் தேவையற்ற செலவுகளை மேற்கொள்வோர் எம்மைப் போன்ற அமைப்புக்களுடன் தொடர்புகொண்டு அவற்றின் ஒருபகுதியை எங்களைப் போன்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும். இதனால், நாங்கள் அவர்களின் நிகழ்வுகளில் பங்கு கொண்ட மாதிரியும், அவர்கள் எங்களுக்கு உதவிய உணர்வும் ஏற்படும் என்பதே எனது கருத்தாகும்.**



பராமரித்து வந்தேன். தனிமனித முயற்சியுடன் ஒரு சிலரது உதவிகளும் எனக்குக் கிடைத்தது. ஆதரவின்றியிருந்த முதியவர்கள் தமது இறுதிக் காலத்தை மகிழ்வுடன், நல்ல முறையில் கழிக்க வழிவகை செய்தேன்.

1999 ஆம் ஆண்டு நான் பங்குக் குருவாக ஊர்காவற்துறையில் இருந்தவேளை - பெற்றோரை இழந்த ஐந்து சிறுவர்கள் என்னுடன் இணைந்து கொண்டனர். பெற்றோரை இழந்த, வறுமைக் கோட்டுக்குட்பட்ட சிறுவர்களை நல்ல முறையில் வழிப்படுத்தி, கல்வி புகட்ட வேண்டுமென்ற எண்ணம் எனக்குள்ளே ஏற்பட்டது. நாளடைவில் 20 சிறுவர்களை

நிறைவடைகிறேன். இருந்தபோதிலும் கல்லூரி நிர்வாகத்திற்கு இன்னோர் குருவானர் என்னுடன் இணைந்து கொண்டால் மிகவும் உதவியாகஇருக்கும். இதுதொடர்பாக ஆயருடனும் வினயமாக வேண்டியுள்ளேன். பிள்ளைகளைப் பொறுத்தவரையில் பலதுறைகளிலும் திறமையானவர்கள் உள்ளனர். இவர்களுக்கான மேலதிகப் பயிற்சிகளையும் வழிகாட்டல்களையும் வழங்க முன்வரும் எவரையும் இருகரம் நீட்டி வரவேற்கிறேன்.

சின்ன நிகழ்வுகளிற்கும் ஆடம்பரமாகத் தேவையற்ற செலவுகளை மேற்கொள்வோர் எம்மைப் போன்ற அமைப்புக்களுடன் தொடர்புகொண்டு அவற்றின் ஒருபகுதியை எங்களைப் போன்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள

### இன்றைய சிறுவர்கள்... நாளைய தலைவர்கள்

# நாட்டுக்கு பெருமை தரப்போவோர் இந்த சிறுவர் இல்லத்தில் உள்ளனர்

**20** வருடகாலமாக நடைபெற்ற யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களில் - 3:1 பகுதியினர் சிறுவர்களாவர். அனாதைகளாக்கப்பட்டும், அங்கவீனர்களாகியும், கொல்லப்பட்ட சிறுவர்களும் இவற்றில் அடங்குவர். இதனை விட - மக்கள் மத்தியில்



ஏற்பட்ட வறுமை நிலை, தொழிலின்மை, இடப்பெயர்வு இயற்கை அனர்த்தங்களால் அனேகமான சிறுவர்கள் உளரீதியான பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளமை முக்கியமான பிரச்சினையாக இனம் காணப்பட்டுள்ளது.

சிறுவர்களை என்னிடம் வர விடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள் என்ற இயேசுவின் இறைவார்த்தைகளுக்குச் செயல் வடிவம் கொடுத்து, இறை அன்பிலும், மனிதநேய ஒன்றிப்புடனும் சிறுவர்களைப் பராமரித்து, வழிநடத்தி வருகிறார் அருட்தந்தை இயேசுதாசன் அடிகளார். ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி வளாகத்தில் இயங்கிவரும் கிறீஸ்து சிறுவர் இல்லம் இன்று (20.11.2005) தன் இரண்டாவது வயதைப் பூர்த்தி செய்து, மூன்றாவது வயதில் கால் பதிக்கிறது.

புனித அந்தோனியார் கல்லூரி அதிபரும், கிறீஸ்து சிறுவர் இல்ல இயக்குநரும், பாதுகாவலருமான அருட்திரு ஜே.ஏ. இயேசுதாசன் அடிகளாரைச் சிறுவர் இல்லத்தில் சந்தித்தோம். அவர் பகிர்ந்து கொண்ட கருத்துகளை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

**இந்தப் பணியில் உங்களை இணைத்துக் கொண்டமை தொடர்பாக -**

எமது பகுதிகளில் இடம் பெற்ற, இடம்பெறுகின்ற அசம்பாவிதங்களால் அகதிகளானோர் உடல், உளரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இதனால் பலர் பிறர் தயவை நாடி நின்றபோதும், அவர்களுக்கான தேவை, விருப்பங்களை நிறைவு செய்வோர் மிகக்குறைவென்றே கூறவேண்டும். இந்த நிலையில் 1995/1996 ஆம் ஆண்டுகளில் இளவாலைப் பகுதியில் என்னுடைய பணி ஆரம்பமானது.

இராணுவ நடவடிக்கை காரணமாக தவறவிடப்பட்ட, கைவிடப்பட்ட 70 முதியவர்களை நான்கு இடங்களில் வைத்துப்

இணைத்துக்கொண்டு, தனி நபரின் வீட்டில் தங்கினோம். சிறுவர்களுடன் நானும் தங்கினேன். கால ஓட்டத்தில் 50 சிறுவர்கள்வரை என்னை நாடிவந்தனர். வசதியீனங்கள் போதாமையால் 2004 ஆம் ஆண்டு இதேகாலப்பகுதியில் என் பெற்றோரின் உதவியுடன் கிறீஸ்து இல்லத்தை ஆரம்பித்து, தொடர்ந்து நடத்தி வருகிறேன்.

**எந்தெந்த இடங்களைச் சேர்ந்த சிறுவர்கள் உள்ளனர். இவர்களை எவ்வாறு உள்வாங்குகிறீர்கள்?**

அருட்தந்தை -: புங்குடுதீவு எழுவைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, மெலிஞ்சிமுனை, வடமராட்சி தென்மராட்சி, வன்னிப் பிரதேசப் பிள்ளைகள் எனப் பல இடங்களைச் சேர்ந்தவர்களும் உள்ளனர். 10 வயது முதல் 21 வயது வரையான ஆண்களை மட்டுமே பராமரித்து வருகிறேன். பெற்றோரை இழந்த, கல்வியை இடைநிறுத்திய, வறுமைக் கோட்டுக்குட்பட்டவர்கள், பேரலையால் பாதிக்கப்பட்ட வர்களில் 20 பேர் என 95 வரையான சிறுவர்கள் உள்ளனர். பங்குக் குருக்களின் சிபாரிசுடனும், எம்மால் இனங் காணப் படும் சிறுவர்களையும் இணைத்துப் பராமரித்துவருகிறேன்.

**சிறுவர் இல்லத்தைப் பொது மைப் படுத்தநீங்கள் ஏதேனும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளீர்களா...**

அருட்தந்தை -: எமது ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் ஆசீர்வாதத்துடனும், அனுமதியுடனுமே ஆரம்பிக்கப்பட்டபோதிலும், ஆயர் இல்லத்தினால் எதுவித உதவிகளும் வழங்கப்படுவதில்லை. எனது நண்பர்கள், உறவினர்கள், நலன்விரும்பிகள் எனத் தாராள மனம்படைத்தோரினாலேயே இவ்வாறு இயங்கமுடிகிறது. வெளியார்களையும் உள்ளடக்கியதான நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்திப் பொதுமைப்படுத்த உள்ளேன். இன்று நிரந்தரமான கட்டடத்தில் இயங்கிவருகின்றதை நான் பெரியபேறாகக் கருது கிறேன்.

ஆனால், அடிப்படை வசதி, வாய்ப்புகள் இன்னும் முழுமையாக ஏற்படுத்தப்படவில்லை. இருந்தபோதிலும், சிறு சிறு நகர்வுகளினூடாக வளர்ந்து வருகிறோம். காலப்போக்கில் பல ஆயிரம் பிள்ளைகளுக்கு அபயமளிக்கும் இல்லமாக மலரும் என்பது கண்கூடான வளர்ச்சியின் மூலமாக உணரமுடிகிறது. தனவந்தர்களின் ஒத்துழைப் பும், அரவணைப்பும் இருக்கும் போதே இவை சாத்தியமாகும்.

**தேவாலயத்தில் குருவாக, கல்லூரியில் அதிபராக, சிறுவர் இல்லத்தில் இயக்குநராக, பாதுகாவலராக செயற்படுகிறீர்கள். ஏதேனும் நெருக்கீடுகள் உள்ளனவா...**

அருட்தந்தை -: இறைவார்த்தைகளினூடாக சமூகப் பொதுப் பணியாற்றுவதில் நான் பெரு

வேண்டும். இதனால், நாங்கள் அவர்களின் நிகழ்வுகளி[illegible]ங்கு கொண்ட மாதிரியும், அவர்கள் எங்களுக்கு உதவிய உணர்வும் ஏற்படும் என்பதே எனது கருத்தாகும். மருத்துவத் தேவை தொடர்ச்சியாக தேவையான ஒரு விடயம். நோய்கள் தொடர்பான விழிப்பு



ணர்வும் சிறுவர்களுக்குத் தேவை. இதற்கு யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் தான் முன்வர வேண்டும்.

**எதிர்கால திட்டங்கள் எதனையும்..**

அருட்தந்தை -: இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் எனக்கு மிகவிரைவில் நல்ல அறுவடைகிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. மாவட்டத்துக்கு மட்டுமன்றி நாட்டிற்கே பெருமை தரக்கூடிய சிறுவர்கள் உள்ளனர். இந்தச் சிறுவர்களை கல்வி மற்றும் ஏனைய வசதிகளை வழங்கி அவர்களை சமூகத்துக்கு ஏற்றவர்களாக மாற்றி வருகிறேன். இங்குள்ள ஒவ்வொருவரும் தான் சார்ந்த சமூகமாற்றத்திற்கு தங்களாலான சேவையை வழங்குவார்கள் என்பதில் ஐயமில்லை. கட்டாயமாக இவற்றை மேற்கொள்ள வேண்டுமென்பதில்லை. தாம் வாழ்வதினூடாக சமூகத்தையும், தாம் சார்ந்தவர்களையும் வலுப்படுத்துவார்கள் என்றார் அருட் தந்தை ஜே.ஏ.இயேசுதாசன் அடிகள்.


இறைபணியாற்றத் தன்னை அர்ப்பணித்த அடிகளார் மனிதாபிமானப் பணிகளில் மிக நீண்டகாலமாக செயற்பட்டு வருகின்றார். 1990ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தின் விமானத் தாக்குதலில் மயிரிழையில் உயிர் தப்பியவர். (இடம் பெயர்ந்தவர்களுக்கென கொழும்பில் இருந்து உணவுப் பொருட்களை கிளாலியூடாகப் படகில் கொண்டுவரும் போது) இந்தச் சம்பவத்தில் அடிகளார் கொல்லப்பட்டுள்ளார் என்ற செய்தி யாழ்ப்பாணம், கிளிநொச்சி எங்கும் பரவியது. ஆனால், இறைவனால் இறைமக்களுக்கு சேவையாற்றவெனக் காப்பாற்றப்பட்டார்.

பல இன்னல்களுக்கு மத்தியில் இறைபணியூடே சமூக, பொதுப்பணியாற்றிவரும் அடிகளாரின் பணி தொடர வேண்டும். சிதறுண்ட மனித சமூகத்தை ஒன்று திரட்டி வழிநடத்தும் அடிகளாரின் பொது வாழ்வுப்பயணத்தில் அடிகளாருடன் இணைந்து கொள்ள எம் சமூகம் முன்வர வேண்டும்.

**காவலூர்.விஜேந்திரன்**

## எம் மண்ணின் வீரர்கள்...

# எந்தவொரு அணியும் வெற்றி பெறுவதற்கு சக வீரர்களுடனான புரிந்துணர்வு அவசியம்



யும் புதிய அனுபவங்களையும் பெறக் கூடியதாகவுள்ளது. எனக்குக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தைப் பெரும் பேறாகக் கருதுகிறேன். இப்பொழுது யாழ்ப்பாணத்தில் பல வீரர்கள் இருந்தாலும் மிகத் திறமையாக, பொறுமையாக நாவாந்துறை சென். மேரிஸ் வின்சிங்கைக் குறிப்பிட முடியும். அண்மைக்காலமாக உதைபந்தாட்டப் போட்டிகளில் குழப்பங்கள் ஏற்பட்டு வருகின்

**ஒவ்வொரு வீரருமே தமது அணி வெற்றி பெற வேண்டுமென்பதற்காக தமது சக்திகளுக்கு அப்பாலான உழைப்பை வழங்குவர். இவ்வாறான உழைப்பின் போது மிக அவதானமாக கடைப்படிக்க வேண்டியது எதிரணி வீரர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்படுவதுதான்.**

**உ**தைபந்தாட்டத்தை உதைபந்தாட்டமாக விளையாடினால் ஆபத்து இல்லை. அவ்வாறு ஆடினால் அசம்பாவிதங்கள் இடம் பெறுவதையும் தடுக்க முடியும் யாழ்ப்பாணத்திலுள்ள உதைபந்தாட்டக் கழகங்களில் அநேகமானவற்றில் இளையவர்களே விளையாடி வருகின்றனர். இளம் சமூகம் உதைபந்தாட்டக்களத்தில் நிற்பதால், புரிந்துணர்வுடன் செயற்படும் போது ஆரோக்கியமான விளையாட்டுக்களையும், அதேவேளை ஆரோக்கியமான வீரர்களையும் பார்க்க முடியும்.

இவ்வாறு குறிப்பிடுகிறார் உதைபந்தாட்ட வீரர் தேவா. யாழ்.பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணியின் உபதலைவரான ஜேசுதாசன் - தேவானந் (வயது-25) யாழ்.பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்பும் துறை நானகாம் வருட மாணவன். மானிப்பாய் இந்துக் கல்லூரியின் 15, 17,19 வயது பிரிவுகளில் கல்லூரி அணித்தலைவராக பல போட்டிகளில் கல்லூரியின் வெற்றிக்காக உழைத்தவர்களில் முதன்மையானவர். இவர் நவாலி சென பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகத்தில் 17 வயதில் இருந்து விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம் ஆகியவற்றிலும் அதிக ஈடுபாடுடைய தேவா - பகிர்ந்து கொண்ட கருத்துக்கள் வாசகர்களுக்காக.

அப்பாவினால் இந்தத் துறைக்கு வந்ததெனக் குறிப்பிடுவதை விட, அப்பாவைப் பார்த்தே உதைபந்தாட்டத்தில் கால் வைத்தேன். அப்பா யாழ்.மாவட்ட தெரிவு அணிக்காக நீண்ட காலமாக விளையாடி நவாலி இஜேசு என அறியபபட்டவர். யாழ்.பல்கலைககழக அணிக்காக கடந்த நான்கு வருடங்களாக விளையாடி வருகிறேன். என் திறமையை இனம் கண்டு பயிற்சியையும் ஊக்கத்தையும் வழங்கியவர்களில் எமது பயிற்றுநர் இளம்பிறையன் ஆசிரியர், முன்னாள் பல்கலை அணித்தலைவர் ஜெயந்திரன் ஆகியோர் முதன்மையானவர்கள். யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் திறமையான வீரர்கள் இருக்கிறார்கள். இலை மறை காயாக இருக்கும் இவர்களை சம்பந்தப்பட்டவர்கள் வெளிக கொணரவேண்டும்.

நான் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியமையால், பல இடங்களுக்கும் சென்று, பல்வேறு போட்டிகளில் பங்கு கொண்டு வருகிறேன்.

இதனால் புதிய நபர்களை

றன. இதற்கு நடுவர்கள், பார்வையாளர்களே காரணமாகின்றனர். சகிப்புத் தன்மையற்ற ரசிகர்கள் உருவாகி வருவதை அவதானிக்க முடிகிறது.

தனியே யாழ்ப்பாணத்திலுள்ள கழகங்களுடன் விளையாடாது மன்னார்,வவுனியா,கிளிநொச்சி, கொழும்பு, போன்ற இடங்களிலுள்ள கழகங்களுடன் சிநேகபூர்வ ஆட்டங்களில் பங்கு கொள்ள வேண்டும். எங்களது திறமைகளை வெளிப்படுத்துவதுடன், ஏனைய இடங்களிலும் பகிர்ந்து கொள்வதற்கு இப்படியான நிகழ்வுகள் நல்லகளமாக அமையும். மினி ஒலிம்பிக் போட்டியில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கும் யாழ்.பல்கலைக்கழகத்துக்கும் இடையிலான போட்டியில் 0:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றோம். அது மறக்க முடியாத போட்டி மட்டுமன்றி வித்தியாசமான அனுபவத்தையும் எமக்குத் தந்தது.

விளையாட்டை விளையாட்டாக எடுக்காது அதனை மதித்து சக வீரர்களைப் புரிந்துகொண்டு விளையாட வேண்டும். இதன் மூலமாக அணி வெற்றி பெறுவதுடன், வீரர்களுக்கு நிறைவான இடங்கள் கிடைக்குமென்பது என் கருத்து. ஒவ்வொரு வீரருமே தமது அணி வெற்றி பெறவேண்டுமென்பதற்காக தமது சக்திகளுக்கு அப்பாலான உழைப்பை வழங்குவர். இவ்வாறான உழைப்பின் போது மிக அவதானமாக கடைப்பிடிக்க வேண்டியது எதிரணி வீரர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்படுவது தான். இவ்வாறு தனது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார் தேவா.

மத்திய நடுத்தர வீரரான தேவா - மிக நேர்த்தியாக தமதணி வீரர்களுக்கு பந்தைப் பரிமாறுவதில் வல்லவர். மைதானத்தில் நுணுக்கமான பந்துப் பரிமாற்றங்களால் எதிரணி வீரர்களை தடுமாற வைப்பது இவரது கலை. தன்னிடம் வரும் பந்துகளையோ தனக்குக் கிடைக்கின்ற பந்துகளையோ தமது முனவரிசை வீரர்களிடம் அனுப்பி தமதணியின் வெற்றிக்குப் பலம் சேர்ப்பவர்களில் ஒருவர். உதைபந்தாட்டத் துறையில் இறுதிவரை தொடர்ந்து விளையாட விரும்புவதாகக் குறிபபிடும் தேவானந் யாழ்ப்பாணத்திலுள்ள முன்னணி வீரர்களில் ஒருவர் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியதொனறு.

**யுவன்**

# இந்தோனேஷியாவில் பூகம்பம்!

## சுனாமி அச்சத்தில் மக்கள்

ஜகார்த்தா —

இந்தோனேஷியாவில் சுமாத்ரா தீவில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட பாரியளவிலான பூகம்பத்தையடுத்து விடுக்கப்பட்ட சுனாமி எச்சரிக்கையால் மக்கள் பெரும் பதற்றமடைந்தனர்.

சுமாத்ரா தீவுப் பகுதியில் கடலுக்கு அடியில் நேற்று முன்தினம் இரவு பயங்கர நில நடுக்கம் ஏற்பட்டது. இந்த நில நடுக்கம் ரிக்டர் அளவில் 6.5 புள்ளியாகப் பதிவானது.

கடலுக்கு அடியில் 30 கிலோமீற்றர் அடித்தளத்தில் இந்த நில நடுக்கம் ஏற்பட்டது. அங்குள்ள சீனாபாங் பகுதியில் இது மையம்கொண்டிருந்தது. இந்த நிலநடுக்கம் சிபோல்கர, சீமெலி ஆகிய பகுதிகளில் உணரப்பட்டது.

கடலுக்கு அடியில் இந்த நில நடுக்கம் ஏற்பட்டதால் சுனாமி ஏற்படக்கூடும் என்ற அச்சத்தில் பொதுமக்கள் வீடுகளை விட்டு பாதுகாப்பான இடத்துக்கு ஓடினர்.

ஆனால், நிலநடுக்கம் ஏற்பட்டு 1 மணிநேரம்வரை சுனாமி பேரலைகள் ஏற்படவில்லை. சேதமும் ஏற்படவில்லை.

இதேபோல் அந்தமானிலும் நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது. சுனாமி பீதியில் பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியே ஓடினார்கள்.

# எங்கெங்கு தாக்குதல் நடத்தலாம் இணையத்தளத்தில் தகவல்கள்!

ஜகார்த்தா —

தாக்குதல் நடத்துவது குறித்து தீவிரவாதிகளுக்குப் பயிற்சியளிப்பதற்காக புதிய இணையத்தளம் ஒன்று தொடங்கப்பட்டிருப்பதாக புதிய தகவல் வெளியாகியுள்ளது.

குறிப்பாக அமெரிக்காவைக் கடுமையாக எதிர்க்கும் பின்லேடனின் அல் கொய்டா இயக்க பயங்கரவாதிகள் - மத்திய கிழக்கு நாடுகளிலும் இந்தோனேஷினாவிலும் அடிக்கடி தாக்குதல் நடத்திவருகின்றனர். இந்தோனேசியாவில் பாலித்தீவிலுள்ள ஒரு ஹோட்டலில் கடந்த ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி தீவிரவாதிகள் வைத்த குண்டு வெடித்ததில் 20 பேர் பலியாகினர்.

இந்த நிலையில் தீவிரவாதிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக அங்கு இணையளத்தளம் ஒன்று தொடங்கப்பட்டிருப்பது இப்போது தெரியவந்துள்ளது. அல்ஷார் எல் முசிலிமின் என்ற பெயரில் தொடங்கப்பட்டுள்ள இந்த இணையத்தளத்தில் - இந்தோனேசியாவில் எந்தெந்த இடங்களில் தாக்குதல் நடத்துவது; தலைநகர் ஜகார்த்தாவுக்கு வரும் வெளிநாட்டவரை எப்படிச் சுட்டுக்கொல்வது; வெடிகுண்டுகளை எப்படி வீசுவது; தப்பிச்செல்வது எப்படி என்பன போன்ற தகவல்கள் இடம்பெற்றிருக்கின்றன.

தாக்குதல் நடத்தவேண்டிய இடங்கள் பற்றிய வரைபடங்களும் அதில் இடம்பெற்றுள்ளன.

கடந்த ஒக்டோபர் 1 ஆம் திகதி பாலித்தீவில் நடத்தப்பட்ட தாக்குதலுடன் தொடர்பிருப்பதாகச் சந்தேகிக்கப்படும் 3 பேரில் ஒருவரான அப்துல் அஜிஸ் என்பவர் இந்த இணையத்தளத்தைத் தொடங்கியிருப்பதாக இந்தோனேஷிய பொலிஸார் தெரிவித்தனர். இந்த இணையத்தளம் விரைவில் மூடப்படும் என்றும் அவர்கள் கூறினர்.

இந்தத் தகவல் வெளியானதைத் தொடர்ந்து இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தா உள்ளிட்ட முக்கிய நகரங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக வெளிநாட்டவர் வசிக்கும் பகுதிகளில் கண்காணிப்புத் தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது.

உலக நோக்கு

# வதந்தியைக் கிளப்புகிறது சி.ஐ.ஏ. பிடல் கஸ்ட்ரோ கடும் கண்டனம்

ஹவானா —

நான் செத்துவிட்டதாக தினம்தினம் அமெரிக்கா புரளி கிளப்பிவருகிறது. ஒருநாள் உண்மையில் நான் இறந்துவிட்டாலும் அதை யாரும் நம்பப்போவதில்லை என, கியூப ஜனாதிபதி பிடல் கஸ்ட்ரோ கிண்டல் செய்துள்ளார்.

கியூப ஜனாதிபதி பிடல் கஸ்ட்ரோ-பார்க்கின்சன் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார், தற்போது நோயின் தீவிரம் அதிகரித்துள்ளது, தனது பணிகளை அவரால் பார்க்கமுடியவில்லை என்று சி.ஐ.ஏ.அதிகாரிகள் கடந்த வியாழக்கிழமை புதுக்குண்டு ஒன்றைப் போட்டனர்.

இதேவேளை, ஹவானா பல்கலைக்கழக மாணவர்கள் முன்னிலையில் ஜனாதிபதி பிடல் கஸ்ட்ரோ உரை நிகழ்த்திக்கொண்டிருந்தார். அவர் பல்கலையில் படிக்கத் தொடங்கி 60 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி இந்த விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஐந்து மணி நேரம் நின்றபடி தொடர்ந்துபேசிய அவர் கூறியதாவது -

அமெரிக்கர்கள் தினம் தினம் என்னைக் கொன்றுவருகின்றனர். கஸ்ரோவுக்கு அந்த நோய் உள்ளது. இந்த



நோய் உள்ளது என்று தினமும் புரளி கிளப்பிவருகின்றனர். இப்போது புதிதாக பார்க்கின்சன் நோயால் நான் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளனர். அவர்கள் சொல்வதைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது.

ஒருநாள் உண்மையில் இறந்துவிட்டாலும் அதை யாரும் நம்பப் போவதில்லை. பார்க்கின்சன் நோயால் நான் பாதிக்கப்பட்டாலும் அதைப் பற்றிக் கவலைப்படப்போவதில்லை. பாப்பரசர் இரண்டாவது ஜோன் போல் கூட இந்த நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அதனால் அவர் தளர்ந்து போகவில்லை.

உலகம் முழுவதும் பல நாடுகளுக்கு அவர் சுற்றுப்பயணம் செய்துகொண்டேயிருந்தார். 2004 ஆம் ஆண்டு ஒக்டோபரில் நான் கீழே விழுந்ததால் பலத்த அடிபட்டது. அதிலிருந்து சிறிது சிறிதாக மீண்டுவருகிறேன். முன்பு எப்போதையும்விட அதிகநேரம் உழைக்கிறேன். முன்பைவிட நலமாக இருக்கிறேன். இவ்வாறு கஸ்ட்ரோ கூறினார்.



அமெரிக்காவின் கலிபோர்னிய மாகாணத்திலுள்ள வென்ட்சுராவில் 1500 ஏக்கர் பரப்பளவுள்ள காட்டுப் பகுதியில் காட்டுத்தீ பரவியது. இதனை அணைப்பதற்கு விமானம் மூலம் நீர் பீச்சியடிக்கப்படுவதை காணலாம்.


யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து)

**பதவி வெற்றிடம்**

**சுவிஸ்கன் கைக்கடிகாரங்கள் - விற்பனை பிரதிநிதி**

எமது சமாசம், சுவிஸ் நாட்டில் இருந்து விரைவில் இங்கு தருவிக்கவுள்ள சர்வதேச தரம் வாய்ந்த சுவிஸ்கன் கைக்கடிகாரங்களை (SWISKAN WATCHES) சந்தைப்படுத்துவதற்காக விற்பனைப் பிரதிநிதி ஒருவருக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர், சந்தைப்படுத்தல் வர்த்தகத்துறையில் அனுபவம் மிக்கவராக இருப்பதுடன், 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். தமது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் தகைமைச்சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து எதிர்வரும் 30.11.2005 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக - தலைவர், யாழ்.மா.வி.நு.கூ.ச.சமாசம், 111 பிரதானவீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

தலைவர்,
யாழ்.மா.வி.நு.கூ.ச.சமாசம்.
111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(C/4837)



நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**நமது ஈழநாடு நடாத்தும் க.பொ.த (சாதாரண தரம்) - 2005 பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்கு.**

எங்கு? எப்போ? எப்படி?

விபரம் வெகு விரைவில் உங்கள் அபிமான நாளிதழ் நமது ஈழநாடு பத்திரிகையில்....

அனுசரணை வழங்குபவர்கள்:

**D.S.I**
Show Room,
426, Hospital Road, Jaffna.

**S T P**
Your Partner in It Solution
73, Plaly Road,
Kantharmadam, Jaffna.

**I.D.M**
Computer Centere
216, Navalar Road, Jaffna.
Tel: 021 4591398, Fax: 021 4591398
E.mail: idmjaffna@idm.lk,www:idm.lk

kit WESTERN UNION
**SRI MURUGAN**
Communication & Agency Post Office
303, K.K.S. Road, Jaffna.
T.P: 021 2222670, 5392 Fax: 021 2223214, 3435
Hot line : 0777427182 E.mail:del-smskr@eureka.lk

**LONDON ENGLISH COLLEGE**
105, Arasady Road, Jaffna.
T.P: 021 2225889
தரம் 1-6 வரையான ஆங்கில வகுப்புக்கள்.
தரம் 8 ஆங்கில வகுப்புக்கள்
IELTS O/L, A/L English Literature
Spoken English Diplama in English

YTS
**யாழ் ரெக்**
இல.3, சேர் பொன் இராமநாதன் வீதி, கலட்டிச்சந்தி.
(யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்)

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212, K.K.S. Road, Jaffna.
T.P: 021 22 5542



51 ஆவது
அகவையில் வீறுநடைபோடும்
எம் தேசியத்தலைவருக்கு
எமது இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்

நிலை தடுமாறா நிமிர்வும்
தமிழர் தலைமைக்கு இடங்கொடுத்த
வீரமும்,
பொறுமையின் இலக்கணத்தில்
நகல் எடுத்த தொடர்பும்,
போரிலும் சமாதானத்திலும்
உலகம் எதிர்பார்த்திருக்கும்
விடுதலையின் அத்தியாயம்
தலைவர் வாழ நிலைக்கிறது.



ஆசிரியர்கள், மாணவர்கள்,
இலவசக் கணினிப் பயிற்சி நிலையம்,
சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை,
தென்மராட்சி.
(2114)

நமது ஈழநாடு

The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

# படைக் கட்டமைப்பிலும் மாற்றம் சந்திரிகாவின் உத்தரவுகள் ரத்து!

## நடவடிக்கை எடுக்கிறார் ஜனாதிபதி மகிந்த

கொழும்பு —

புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றிருக்கும் மகிந்த ராஜபக்ஷ முப்படைகளினதும் உயர் கட்டளைப் பீடங்களில் மாற்றங்களைச் செய்யவிருப்பதாகத் தெரியவருகிறது.

இதன் ஒரு கட்டமாக முப்படைகளின் சிரேஷ்ட தளபதிகளினதும் ஓய்வு பெறும் வயதை உயர்த்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்திருந்த உத்தரவை ரத்துச் செய்வதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முடிவு செய்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு மூன்று வாரங்களுக்கு முன்பாக சந்திரிகா குமாரதுங்க இது தொடர்பிலான உத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

இந்த உத்தரவானது நீதியற்றது, பாரபட்சமானது என்று சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு மகிந்த ராஜபக்ஷ கருத்துத் தெரிவித்திருந்தார். தனது முதன்மையான பரிசீலனைகளில் இந்த விடயமும் இருக்கும் என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரத்துக்காக பலாலி இராணுவ தளத்துக்கு மகிந்த ராஜபக்ஷ சென்றபோது அவரிடம் இது தொடர்பாக இராணுவத்தினர் முறைப்பாடு செய்தனர். தாங்கள் இராணுவத்தின் உயர் நிலைகளுக்கு வருவதற்கு முன்பாகவே ஓய்வுபெற்றுவிடவேண்டிய நிலை இருப்பதாகவும், மகிந்தவிடம் இடைநிலை அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

தாம் ஜனாதிபதியாகத் தெரிவானவுடன் இந்தப் புதிய நடைமுறையை ரத்துச் செய்வதாக ராஜபக்ஷ உறுதியளித்திருந்தார். சந்திரிகாவின் புதிய உத்தரவு ரத்துச் செய்யப்படும் நிலையில் இந்த உத்தரவின் மூலம் பலனடைந்த இராணுவ அதிகாரிகள் பதவி விலகும்படி உத்தரவு பிறப்பிக்கப்படக் கூடும் என்றும் தெரியவருகிறது.

ஆறு மாத சேவை நீடிப்பு பெற்ற மேஜர் ஜெனரல் ஒருவரும், ஒரு வருட சேவை நீடிப்பு பெற்ற மேஜர் ஜெனரல் ஒருவரும் இவ்வாறு பதவி விலகும் நிலை ஏற்படும்.

அதேவேளை, முப்படைகள் தொடர்பாக பல முக்கிய மாற்றங்களைச் செய்யவும் புதிய ஜனாதிபதியின் முப்படைகளினதும் பிரதம தளபதியுமான மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

## முல்லைத்தீவில் மினி சூறாவளி

முல்லைத்தீவு —

முல்லைத்தீவில் நேற்று நண்பகல் வீசிய மினி சூறாவளியால் வாடிகளும், படகுகளும் சேதமடைந்தன.

நேற்று நண்பகல் 12 மணி தொடக்கம் ஒரு மணிவரை செம்மலை, அளம்பில் பகுதிகளில் இந்த மினி சூறாவளி வீசியது.

இதன் காரணமாக செம்மலை பகுதியில் சேதங்கள் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்தச் சூறாவளி காரணமாக செம்மலையைச் சேர்ந்த அகிலா என்பவரின் வாடி பலத்த சேதத்துக்குள்ளாகியது. நான்கு படகுகளும் சேதமடைந்துள்ளன. மரங்கள் முறிந்து அடியோடு சாய்ந்தன.

# மறுதேர்தல் நடத்தக்கோரி ஐ.தே.க வழக்குத் தாக்கல்!

## இன்று கூடி ஆலோசிக்கவுள்ளது

கொழும்பு —

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மறுவாக்குப் பதிவு நடத்த உத்தரவிடுமாறுகோரி ஐக்கிய தேசியக் கட்சி வழக்குத் தாக்கல் செய்யவுள்ளது. இது தொடர்பாக கட்சியின் உயர் மட்டக்குழு இன்று கூடி ஆராயவுள்ளது.

இதுதொடர்பாக ஐ.தே.கவின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் -

வடக்கு - கிழக்கில் நீதியானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்த தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தவறிவிட்டார். வாக்குப் பதிவுகள் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள், அரச சொத்துக்கள் மற்றும் ஊடகங்கள் முறைகேடுகள் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி வடக்கு - கிழக்கில் நாம் மறுதேர்தல் நடத்த வலியுறுத்தியிருந்தோம்.

வாக்காளர்கள் வாக்களிப்பதைத் தடுத்தமைக்கான உரிய ஆதாரங்கள் இருந்தும் நாட்டின் எந்தப் பகுதியிலும் மறுதேர்தலை தேர்தல் ஆணையாளர் நடத்தவில்லை.

மகிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டதாக தேர்தல் ஆணையாளர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் முன்பாகவே மறுதேர்தலை நடத்த நாம் வலியுறுத்தியோடு முறைப்பாட்டு மனுவையும் கையளித்தோம்.

ஆனால், வடக்கு - கிழக்கில் வாக்காளர்கள் தடுக்கப்பட்டதாக தமக்கு எதுவித தகவலும் கிடைக்கவில்லை என்று எமது முறைப்பாட்டை தேர்தல் ஆணையாளர் நிராகரித்துவிட்டார்.

அதேநேரத்தில் தேர்தல் முடிவுகளை அறிவித்த போது வடக்கு - கிழக்கு நிலைமை குறித்த முடிவுகளை அறிவித்தபோது அந்தப் பகுதி நிலைமை குறித்த தனது அதிருப்தியை தயானந்த திஸநாயக்க வெளியிட்டிருந்தார்.

நாட்டின் மிக முக்கியமான தேர்தல் கண்காணிப்பாளர்களான பவ்ரெல் அமைப்பினரும் வடக்கு - கிழக்கில் மக்கள் வாக்களிக்கப்படாது தடுக்கப்பட்டனர் எனத் தெரிவித்துள்ளனர்.

எனவே, வடக்கு - கிழக்கில் மறுதேர்தலை நடத்த வலியுறுத்தும் சட்டபூர்வ நடவடிக்கையை மேற்கொள்வது தொடர்பாக இன்று கூடி முடிவெடுக்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## முஸ்லிம் தம்பதிகள் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - வாழைச்சேனை மீராவோடையில் ஐ.தே.கவின் தீவிர ஆதரவாளர்களான முஸ்லிம் தம்பதிகள் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

ஐ.தே.க ஆதரவாளரான மீராசாகிப் லெப்பை அகமது லெப்பை மற்றும் அவரது மனைவியான மொகமட் லெப்பை பௌசியா ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

மீராசாகிப் அகமது லெப்பை மத்திய கிழக்குக்கு ஆட்களை அனுப்பும் உப முகவர் என்றும், ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கவுக்கு ஆதரவு அளித்தவர் என்றும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அரசியல் காரணங்களுக்காக அல்லது மத்திய கிழக்கு வேலை வாய்ப்புத் தொடர்பான கொடுக்கல் வாங்கல் பிரச்சினை காரணமாக இந்த இரட்டைக் கொலைகளும் இடம்பெற்றிருக்கலாம் என விசாரணைகளை மேற்கொண்டுவரும் வாழைச்சேனை பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

இந்தக் கொலைகள் தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின்படி - கொலையாளிகள் முதலில் கணவனை சுட்டுக்கொன்றுவிட்டு சென்றதாகவும் பின்னர் கொலையாளிகள் தம்மை அவரது மனைவி அடையாளம் கண்டிருக்கலாம் என சந்தேகம் கொண்டு மீண்டும் திரும்பி அவரையும் சுட்டுவிட்டு சென்றதாகவும் கூறப்படுகிறது.

அந்த பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் ஆயுதபாணிகளாலேயே இவர்கள் இருவரும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக பரவலாக மக்கள் மத்தியில் பேசப்படுகிறது.

## மலிக் சமரவிக்கிரம பதவி விலகினார்!

கொழும்பு —

தேர்தல் தோல்வியையடுத்து ஐ.தே.கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம நேற்றுமுன்தினம் பதவி விலகினார். ஐ.தே.க தவிசாளர் மலிக் சமரவிக்கிரம தனது பதவி விலகல் கடிதத்தை கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அதன் பிரதியை கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியவுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

## கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்று

கொழும்பு —

நாடாளுமன்றக் கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்று இடம்பெறவுள்ளது. இந்தக்கூட்டத்தில் நாடாளுமன்ற எதிர்கால நடைமுறைகளைப் பற்றி முக்கியமாக ஆராயப்படும்.

நாடாளுமன்றம் இம்மாதம் 22 ஆம் திகதி மீண்டும் கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மொரட்டுவ - பாணந்துறை மக்கள் சுனாமி அச்சத்தால் இடம்பெயர்வு

கொழும்பு —

சுனாமி ஏற்படுவதற்கான அறிகுறி தென்படுவதாகப் பரவிய வதந்தியை அடுத்து மொரட்டுவ, பாணந்துறை பகுதி மக்கள் நேற்றுப் பிற்பகல் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறினர்.

இந்தப் பிரதேச கடற்பரப்பில் கடல் நீரின் நிறம் மாறியதையடுத்து மக்கள் சுனாமி ஏற்படலாம் என்ற அச்சத்திலேயே இடம்பெயர்ந்தனர்.

எனினும், சுனாமி ஏற்படுவதற்கான அறிகுறிகள் இல்லையெனத் தெரிவிக்கப்பட்டதையடுத்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

### புதிய பிரதமராக...

இன்றுகாலை 11 மணியளவில் டி.எம்.ஜெயரட்ண ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளார்.

இதனையடுத்து இன்று மாலையே புதிய அமைச்சரவை தெரிவுசெய்யப்படுவதுடன், பதவியேற்பு வைபவமும் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### சந்திரிகாவுக்கு....

வுள்ளதுடன், முப்படைகளினதும் அணிவகுப்பு மரியாதையும் இடம்பெறும்.

அன்றைய தினம் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான ஜனாதிபதி மாளிகையில் இருந்து வெளியேறவுள்ளார் எனவும் தெரியவருகிறது.

### உடன்பாட்டை...

பணியிலிருந்து நோர்வேயை விலகிச்செல்லுமாறு பகிரங்க கருத்துக்கள் எதனையும் தெரிவிக்கவில்லை. இருந்தபோதிலும் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தங்களை மேற்கொள்ள அவர் முயல்வாராயின் நோர்வே சமாதான ஏற்பாட்டாளர் பதவியிலிருந்து விலகிச் செல்வதைத் தவிர வேறு வழிகள் கிடையாது.

அதேவேளை, விரைவில் நோர்வேயில் இருந்துவரும் விசேட குழுவொன்று புதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த பின்னரே, சமாதான முயற்சி மற்றும் போர்நிறுத்த உடன்பாடு ஆகியன குறித்து ஒஸ்லோ இறுதியான முடிவு எடுக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### வெளிவிகார...

பின்னரே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இந்த நெருக்கடியான கட்டத்தில் இலங்கைக்கு கதிர்காமரைப் போன்றதொரு திறமை வாய்ந்த வெளிவிவகார அமைச்சரே தேவை. அனுராவை வேண்டுமானால் அடுத்த உள்துறை அமைச்சராக நியமிக்கலாம் என்றும் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கிண்டலடித்ததாகவும் தெரியவருகிறது.

### போட்டிகளில்...

புலிகளின் குரலின் மூத்த ஒலிப்பதிவாளர் விஜய மலர் நிகழ்த்தினார்.

அடுத்து விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கா.வே.பாலகுமாரன் சிறப்புரை நிகழ்த்தினார்.

வானோசை 15 கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு தமிழீழ தேசியத் தலைவர் கையெழுத்திட்டு வழங்கிய சான்றிதழ்களை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சோதியா படையணியின் சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா, மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம், மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் வழங்கினர்.

தொடர்ந்து புலிகளின் குரல் பொறுப்பாளர், போராளிகள், பணியாளர்களுக்கு தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பரிசில்களை வழங்கினார்.

## நோர்வேயை...

இந்த அமைதிப்பணியில் இணைத்துக்கொள்ளப்படும் என்று திருத்தம் செய்திருந்தார்.

இரு தரப்பு என்ற நிலையிலிருந்து பலதரப்பு பேச்சுவார்த்தையை தாம் முன்னெடுக்கவுள்ளதாகவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஆனால், தமது அமைதி தொடர்பான பேச்சுக்களில் நோர்வே குறித்த கருத்துக்களை அவர் வெளிப்படுத்தவில்லை. இதனால் சமாதானப் பேச்சுக்களில் நோர்வேயின் அனுசரணையாளர் பணி குறித்த கேள்வி கொழும்பு அரசியல் வட்டாரத்தில் எழுந்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்ற நிலையில் போர்நிறுத்த ஒப்பந்தத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றும் இலங்கையில் யுத்த அபாயம் இருப்பதாகவும் இலங்கைக்கான நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் எச்சரித்திருந்தார்.

கடந்த காலங்களில் நோர்வேயை வெள்ளைப்புலி என்று மிகக்கடுமையாக விமர்சனம் செய்துவந்த - நோர்வேக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்த பேரினவாதக் கட்சிகளின் தயவில் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகியுள்ள சூழ்நிலையில் நோர்வே தொடர்ந்து அனுசரணைப் பணியை மேற்கொள்ளமுடியாத நிலையே ஏற்படும் என்று கொழும்பு அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் இந்தியாவின் தலையீட்டை இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் மிகவும் விரும்புவதாகவும், இந்தியாவுக்கு ஒத்துழைக்கக்கூடிய முழு அளவிலான பேரினவாத அரசு இலங்கையில் அமைந்திருப்பது நல்ல வாய்ப்பென்றும் அவர்கள் கருதுகின்றனர்.

பிராந்திய விடயங்களில் தன்னை வல்லரசாக வெளிப்படுத்துவதற்காக இந்திய கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் இந்திய புலனாய்வுத்துறையினரது செயற்பாடுகள் முன்னைவிட இப்போது இலங்கையில் பகிரங்கமாகவும், இலங்கை அரசியலைத் தீர்மானிக்கும் ஒரு சக்தியாகவும் விரிவடைவதற்கான சாத்தியக்கூறுகளை மறுப்பதற்கில்லை என்றும் அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

### இளம்பெண்...

சாலையில் ஒப்படைத்தனர்.

சடலத்தைப் பார்வையிட்ட ஆதார வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி சி.கதிரவேற்பிள்ளை - இது சுமார் 26 வயது மதிக்கத்தக்க இளம் பெண் ஒருவரின் சடலம் என்றும், தலையில் கட்டும் றிபனால் சுருக்கிடப்பட்டு, மரணம் சம்பவித்திருப்பதாகவும், சடலம் நீரில் ஊறிய நிலையில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேற்படி சடலம் மீட்கப்பட்ட பகுதிக்கு அண்மையாக இராணுவக் காவலரண் உள்ளதுடன் இந்தப் பகுதி ஆள்நடமாட்டம் இல்லாத வயல் வெளியாகக் காணப்படுகின்றது. இந்தப் பெண் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது. சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### புதிய அமைச்...

துறை அமைச்சராக நியமிக்கப்படலாம் எனவும் கொழும்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரூபா 5 ஐந்து ரூபாவுக்கு என்ன வாங்கலாம் விரைவில்.........

## சூறாவளி அபாயம்...

கனமழை பெய்து வருகிறது. இந்தக் கனமழையால் வடக்கு- கிழக்குப் பகுதிகளில் பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளதுடன் பல கிராமங்கள் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் அலைக்ஸ் தோட்டம் பகுதியில் மூன்று அடிக்கு அதிகமான வெள்ளம் பாய்ந்ததால் சுமார் 200 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. இதைவிட - குச்சவெளி, புல்மோட்டை, மூதூர் கிழக்கு, மூதூர் தெற்கு, ஈச்சம் தீவு, வேப்பங்குளம் போன்ற பகுதிகள் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் வட்டுவாகல் பாலம் மாத்தளன், இரணைப்பாலை போன்ற பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் நேற்றைய தினம் இந்தப் பகுதிகளூடான போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்தது.

இதேவேளை, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு போன்ற பகுதிகளிலும் கடந்த 24 மணி நேரத்துக்கும் மேலாக கடும் காற்றுடன் மழை பெய்து வருகிறது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடும் காற்றுடன் மழைபெய்யக்கூடும் என்றும், சுமார் 20 கிலோமீற்றர் வேகத்திலிருந்து 40 கிலோமீற்றர் வேகம் வரை காற்று வீசலாம் என்றும் சிலவேளைகளில் 70 கிலோ மீற்றர் வேகத்தில் சூறாவெளி கிழக்குக் கரையோரப் பகுதிகளைத் தாக்கலாம் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்திருக்கிறது. இதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்லவேண்டாம் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் எச்சரித்துள்ளது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.11.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.